

# University of Jaffna

# Sir Pon Ramanathan

## Memorial Lecture - 2018

on

**நாக இனக்குழுவும் இலங்கைத்**
**தமிழரும் (அண்மைக்காலத் தொல்லியல்**
**கண்டுபிடிப்புக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)**

by

**Professor.P.Pushparatnam,**
Senior Professor in History,
Head, Department of History,
Faculty of Arts,
University of Jaffna.

on

Tuesday 12th June 2018
at 3.00 p.m

at

Kailasapathy Auditorium
University of Jaffna

# சேர்.பொன்.இராமநாதன் நினைவுப் பேருரை - 2018

Donated by
Arulanantham Srikanthaluxmy
Former Librarian
University of Jaffna

## நாக இனக்குழுவும் இலங்கைத் தமிழரும் (அண்மைக்காலத் தொல்லியல் கண்டுபிடிப்புக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

UNIVERSITY OF JAFFNA
LIBRARY


பேருரை வழங்குபவர்

பேராசிரியர்.ப.புஷ்பரட்ணம்,
சிரேஸ்ட பேராசிரியர், வரலாற்றுத் துறை,
தலைவர், வரலாற்றுத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

290303

12.06.2018

290303



**Sir Pon Ramanathan**

# சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரை

மதிப்பிற்குரிய வேந்தர் அவர்களே துணைவேந்தர் அவர்களே, கலைப்பீடாதிபதி அவர்களே, பதிவாளர் அவர்களே, பேரவை மூதவை உறுப்பினர்களே, பீடாதிபதிகளே, பேராசிரியர்களே, துறைத்தலைவர்களே, சக ஆசிரியர்களே, விருந்தினர்களே, மாணவர்களே ஏனைய நண்பர்களே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கம்.

எனது பேருரையைத் தொடங்க முன்னர் "சைவசித்தாந்த தத்துவஞானி" எனப் பாரத நாட்டவரால் அடையாளப்படுத்தப்பட்ட சேர் பொன் இராமநாதன் அவர்களின் பன்முகப்பட்ட ஆளுமையையும், அளப்பரிய சமூகப் பணிகளையும் இவ்விடத்தில் நினைவுபடுத்திக் கொள்வதை எனது பேருரைக்குப் பொருத்தப்பாடாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சேர் பொன் இராமநாதன் *(1851-1930)* அவர்கள் அர்சியல், சட்டம், சமயம், மொழி, கல்வி, கலை என்பவற்றிற்கு ஆற்றிய அளப்பரிய பணிகளால் இலங்கை வரலாற்றிலே அவர் தனிப்பெரும் தேசியத் தலைவர்களில் ஒருவராக வெளிக்கிளம்பினார். இவரின் சமகாலத்தில் இந்தியாவிலும், இலங்கையிலும் மேலைநாட்டு நாகரிக மோகத்தால் சுதேச மக்களின் பாரம்பரிய மொழி, மதம், கலை, பண்பாடு என்பன மறைந்துவிடும் அல்லது மறக்கப்பட்டுவிடும் என்ற அச்சநிலை காணப்பட்டது. இந்நிலையில் சுதேச மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளைப் பாதுகாக்க இந்தியாவில் பல இயக்கங்கள் தோன்றிப் பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராகப் போராடிய போது யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் சைவத்தையும் தமிழையும் போற்றிப் பாதுகாக்க அரும்பாடுபட்டார். நாவலரின் பின்னர் அப்பணிகளை முன்னெடுத்த தலைவர்களில் சேர் பொன். இராமநாதனுக்கு முக்கிய இடமுண்டு.

1851ஆம் ஆண்டு மானிப்பாயில் பிறந்த சேர். பொன் இராமநாதன் தன் குடும்பத்தினரைப் போல் இந்து சமயத்தை உயிர் மூச்சாகவும், வாழ்வியலின் அடிநாதமாகவும் கொண்டு ஒரு இல்லற ஞானியாக வாழ்ந்தவர். இந்து சமயக் கருத்துக்களை உலக அளவில் எடுத்துச் சென்ற பெருமை இவருக்குண்டு. அவரின் ஆன்மீக ஈடுபாடு பற்றி அமெரிக்காவின் பிரபல்யமான வழக்கறிஞர் மைரோன் பெல்ஸ் அவர்கள் கூறும் போது "எனது வாழ்நாளில் சந்தித்தவர்களில் மிகவும் அற்புதமான ஆன்மீகத் துலங்கல் கொண்ட சிறந்த ஆசிரியர் சேர். போன் . இராமநாதன் அவர்கள்" எனக் குறிப்பிடுகின்றார். இதனால் அமெரிக்காவில் இவர் சென்ற இடமெல்லாம் பிரம்ம ஞானி என்றே அறிமுகம் செய்யப்பட்டார். இவர் இந்து மதத்தைத் தனது பிறப்புரிமையாகக் கொண்டிருந்த போதிலும் அம்மதத்தில் காணப்பட்ட சமரசப் போக்கிற்கு ஏற்ப ஏனைய மதங்களை மதிப்பதிலும், அவற்றிற்குப் பணிசெய்வதிலும் ஆர்வம் காட்டிய ஒருவர் ஆவார். பிரித்தானியர் ஆட்சியால் நலிவுற்றிருந்த பௌத்த மதத்தை மேம்படுத்த பௌத்த பிரமஞான சங்கத்தின் பொருளாளராக இருந்து சங்கத்திற்கு மானியங்கள் வழங்க ஏற்பாடுகள் செய்ததுடன் போயா தின விடுமுறையை நடைமுறைக்குக் கொண்டு வரவும் காரணமாக இருந்தவர் ஆவார்.

கிறிஸ்தவ சமயத்தை நன்கு கற்ற இவர் புனித விவிலியத்திலுள்ள பரி.மத்தேயு சுவிசேசம், பரி. ஜோவான் சுவிசேசம் முதலியனவற்றிற்குத் தமது சமய ஞான நோக்கிலே விளக்கவுரைகளை அளித்துள்ளார். கிறிஸ்தவர்களின் கல்விப்பணியைப் போற்றிய சேர் பொன் இராமநாதன் அவர்கள் மதமாற்றம் செய்வதை வன்மையாகக் கண்டித்த ஒருவர். ஒவ்வொரு மனிதனுக்கும் பிறந்த நாடு, இனம், மதம் மொழி, சமூகம், குடும்பம் ஆகியன அவனின் பிறப்புரிமையாகக் கடவுளால் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை மாற்றுவதற்கு எவருக்கும் உரிமையில்லை என்பதை வலியுறுத்தி வந்தவர்.

இலங்கைச் சட்டசபையில் தாய்மொழிக் கல்வியையும், இலவசக் கல்வியையும் வலியுறுத்தி வந்த சேர். பொன் இராமநாதன் தமிழ் மொழியினதும், தமிழர் பண்பாட்டினதும் பெருமைகளையும்,

சிறப்புக்களையும் தேசிய, சர்வதேசக் கருத்தரங்குகளில் எடுத்துரைத்த பெருமைக்குரியவர். கல்வி உலகியலை மட்டுமன்றி ஆன்மீகத்தையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திய அவர் கல்வி கற்பதில் பால் வேறுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இருக்கக் கூடாதென்பது அவரின் வேணவாக இருந்தது. இவற்றை இவர் ஏற்படுத்திய இரு கல்வி நிலையங்களிலும் செயற்படுத்திக் காட்டினார்.

சேர். பொன் இராமநாதன் தமிழ்ச் சமூகத்திற்கு செய்த மிகப் பெரிய பணிகளில் அவர் அமைத்துக் கொடுத்த கல்லூரிகள் அவருக்கு அழியாப் புகழை ஏற்படுத்தியுள்ளது. அவர் இந்துப் பெண்களுக்கான கல்லூரியை அமைப்பதிலேயே முதலில் அதிக கவனம் செலுத்தினார். அன்றைய காலச் சூழலில் இந்துப் பெற்றோரில் ஒரு சிலர் தமது பெண் பிள்ளைகளை உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி கற்க அனுமதித்திருந்தாலும் தீவிரமான இந்துப் பெற்றோர் தம்பிள்ளைகள் அப்பாடசாலையில் கல்வி கற்கவேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. இதனால் இந்துப் பெண் பிள்ளைகளுக்கென கல்லூரி ஒன்றை அமைப்பதன் மூலம் சமூகம் மேனிலை அடையும் என நம்பினார். "ஆண் ஒருவர் கல்வி கற்பதால் ஒருவன் மட்டும் தான் கற்கிறான். ஆனால் ஒரு பெண் கல்வி கற்பதால் ஒரு சமூகமே கல்வி கற்கிறது" என்ற கருத்தையும் அவர் கொண்டிருந்தார். இவற்றைக் கருத்திற் கொண்டே உடுவில் மருதனா மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அமைக்கப்பட்டது. இதுவே இந்துப் பெண்களுக்காக இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது கல்லூரியாகும். இக்கல்லூரி அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து கீரிமலையில் நடைபெற்ற இந்து வாலிபர் ஆண்டு மகாநாட்டில் மக்கள் பலரும் ஆண்களுக்கான கல்லூரியும் நிறுவப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த போது அதையேற்று 1921 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் ஆண்பிள்ளைகளுக்காக பரமேஸ்வராக் கல்லூரியும் அமைக்கப்பட்டது. இவ்விரு கல்லூரிகளிலும் தமிழ் மொழி, இந்து மதம், கலை பண்பாடு முதலான பாடங்கள் கற்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதுடன் ஒரு இந்து மதச் சூழலில் மாணவர்கள் கற்க

வேண்டும் என்பதற்காக இரு பெரும் ஆலயங்களும் அமைக்கப்பட்டன. இன்றும் இலங்கையில் உள்ள திராவிடக் கலைமரபில் கருங்கற்களால் கட்டப்பட்ட ஆலயங்களில் சிதைவடையாது, மாற்றத்திற்கு உட்படுத்தப்படாது சேர். போன் இராமநாதன் காலத்து நிலையில் பாதுகாக்கப்பட்ட ஒரெயொரு இந்து ஆலயம் என்ற பெருமை இராமநாதன் மகளிர் கல்லூரியில் உள்ள ஆலயத்திற்கே உண்டு.

இலங்கையில் பௌத்த பண்பாட்டைப் பேணிப்பாதுகாக்கத் தோன்றிய கல்வி நிலையங்களான வித்தியோதய, வித்தியலங்கார பிரிவேனாக்களே 1959 களில் பல்கலைக்கழகங்களாக தரம் உயர்த்தப்பட்டன. இக்காலத்திற்கு முன்னரே சேர்.பொன் இராமநாதனின் மருமகன் அமரர் நடேசன் அவர்கள் இராமநாதன் மகளிர் கல்லூரியையும், பரமேஸ்வராக் கல்லூரியையும் இணைத்து இந்துப் பண்பாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றை "இராமநாதன் பல்கலைக்கழகம்" என்ற பெயரில் நிறுவுமாறு கோரிக்கை விடுத்திருந்தார். அக்கோரிக்கை 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாண வளாகமாக உருவாகிப் பின்னர் பல்கலைகழகமாக உயர்த்தப்பட்டதன் மூலம் நிறைவு பெற்றது. 1974 இல் இவ்வளாகத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய கௌரவ பிரதமந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், கல்வியமைச்சர் பதியுதீ மகமத் மற்றும் தமிழ் அரசியல் பிரமுகர்களும் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் ஒன்றை அமைத்ததன் மூலம் தமிழரின் மொழி, மதம், வரலாறு, பண்பாடு பற்றிய ஆய்வுகளுக்கு புதுவழி பிறந்துள்ளதாகக் கூறிய கருத்துக்கள் பாடசாலை மாணவனாக இருந்த எனக்கு இன்று ஞாபகத்திற்கு வருகின்றது. இன்று அதே பல்கலைக்கழகத்தில் சேர்.பொன் இராமநாதன் நினைவுப் பேருரையை நிகழ்த்துவதைப் பெருமையாகக் கருதுகிறேன். அதற்கான வாய்ப்பை எனக்கு வழங்கிய பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக் குழுவினற்கும், துணைவேந்தருக்கும், கலைப்பீடாதிக்கும் என் நன்றிகள்.

சிரேஷ்ட பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்

# நாக இனக் குழுவும் இலங்கைத் தமிழரும் (அண்மைக்காலத் தொல்லியல் கண்டுபிடிப்புக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

தென்னாசியாவில் பண்டு தொட்டு பெரிதும் புழக்கத்தில் இருந்து வந்த ஒரு பெயராக வடமொழியில் நாஹ என்ற பெயரும், தமிழில் நாகம், நாகன், நாகர் என்ற பெயர்களும் காணப்படுகின்றன. இதற்கு மத வழிபாட்டில் நாகத்தை குலமரபுத் தெய்வமாகக் கொண்டிருந்ததே காரணம் எனக் கூறப்படுகிறது. வடஇந்தியாவில் அரசமைத்த குப்தரும், தக்கணத்தில் ஆட்சி புரிந்த சாதவாகனரும் தம்மை நாக குலத்தவர் என அழைத்துக் கொண்டனர். தமிழகத்தின் பண்டைய தலைநகரான நாகபட்டினம் நாகரின் தலைநகர் என்ற கருத்துண்டு. தமிழ்நாட்டில் சங்க இலக்கியத்திலும், சமகாலப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் நாகன், நாகர் என்ற பெயர்கள் குறுநிலத் தலைவர்களுடனும், புலவர்களுடனும், நாடு, நகர், ஊர் ஆகிய இடப்பெயர்களுடனும் இணைந்து வருகின்றன. இலங்கையின் முதல் பாளி வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சம் ஈழத்திற்கு விஜயன் வருவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்களை இயக்கர், நாகர் எனக் குறிப்பிடுகின்றது (Mahavamsa :vi-vii.51-55). ஆயினும் இலங்கையின் மனித வரலாறும், நாகரிக உருவாக்கமும் வடஇந்தியாவில் இருந்து விஜயன் தலைமையில் வந்து குடியேறிய மக்களுடன் தோன்றியவை என்ற கருத்துடைய அறிஞர்கள் பலரும் வடஇந்தியக் குடியேற்றம் நடப்பதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த இயக்கரையும், நாகரையும் மனிதப் பிறவிகள் அற்ற அமானுசர் என்றே குறிப்பிட்டு வந்துள்ளனர் (Mendis *1946:8*இ Paranavitana *1961181-82*). இந்நிலையில் பேராசிரியர் சத்தமங்கல கருணாரட்ன, பேராசிரியர் ராஜ் சோமதேவா போன்ற அறிஞர்கள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களை நம்பகத் தன்மை உடைய ஆதாரங்களாகக் காட்டி இயக்கரையும், நாகரையும் இலங்கையில் வாழ்ந்த தொடக்க கால இனக்குழுக்கள் என அடையாளப்படுத்தியுள்ளனர் (Karunaratne *1984:56*). இக்கருத்தை வடஇந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் 2500

ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்கள், பண்பாடு தொடர்பான தொல்லியற் சான்றுகள் மேலும் உறுதி செய்கின்றன. இத்தொல்லியல் ஆதாரங்கள் இலங்கையில் மனிதவரலாறு, பண்பாடு என்பவற்றின் உருவாக்கத்தை இங்கு வாழ்ந்த இயக்கர், நாகர் எனும் இனக்குழுக்களில் இருந்து ஆராய்ந்து பார்க்க வழியேற்படுத்தியுள்ளது எனலாம்.

இற்றைக்கு 1700 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலங்கையின் தொடக்ககால எழுத்து, மொழி, மதம், இனம், பண்பாடு என்பவற்றை அறிவதற்கு பிராமிக் கல்வெட்டுக்கள் நம்பகரமான சான்றுகளாகக் காணப்படுகின்றன. இலங்கையில் இதுவரை 1500க்கும் மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வளவு எண்ணிக்கையிலான கல்வெட்டுக்கள் தென்னாசியாவில் வேறு எந்த வட்டாரத்திலும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவற்றுள் ஏறத்தாழ 200 கல்வெட்டுக்களில் "நாக" என்ற பெயரைப் பலதரப்பட்ட மக்களும் தனிநபரின் முன்னொட்டு அல்லது பின்னொட்டுப் பெயராகப் பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. அப்பெயருக்குரியவர்கள் இனக்குழுத் தலைவர்கள், சிற்றரசர்கள், அரச அதிகாரிகள், வணிகர்கள் என உயர் பதவிகளில் இருந்ததை அக்கல்வெட்டுக்கள் மேலும் கூறுகின்றன. அவற்றுள் வவுனியாவில் கண்டுபிடிக்கப்பட்ட நான்கு கல்வெட்டுக்கள் அப்பிராந்தியத்தில் ஆட்சியில் இருந்த நாகச் சிற்றரசர்கள் பற்றிக் கூறுகின்றன. கல்வெட்டுக்களில் வரும் செய்திகளைச் சமகாலப் பாளி இலக்கியங்களும் உறுதிசெய்கின்றன. அவ்விலக்கியங்கள் புராதன அநுராதபுரகால அரசியல் வரலாற்றை முன்னிலைப்படுத்திக் கூறுவதால் அக்காலத்தில் ஆட்சியில் இருந்த துல்லத்த நாக (கி.மு.119), கல்லத்த நாக(கி.மு.109-103), சோறநாக (கி.மு.63-51), மகாநாக(கி.பி.7-9), இளநாக (கி.பி.33-43), மகல்லநாக (கி.பி.136-143), குஜநாக (கி.பி.186-187), குஞ்சநாக (கி.பி.187-189), ஸ்ரீநாக (கி.பி.189-209),அபயநாக (கி.பி. 231-240), ஸ்ரீநாக (கி.பி.240-242) முதலான நாக மன்னர்களின் ஆட்சி பற்றியே சிறப்பாகக் கூறியுள்ளன. இங்கே இலங்கையில் வடஇந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் காலத்திற்கு முந்திய நாக மக்கள் பற்றி வரலாற்று நினைவு பல நூற்றாண்டுகள் கடந்த நிலையில் வரலாற்றுத் தொடக்ககால

(கி.மு.3-கி.பி.3நூற்றாண்டு வரை) வரலாற்றில் முன்னிலைப்படுத்திக் கூறுவது நாக மக்களுக்கும் பிற்கால மக்களுக்கு இடையிலான உறவையும், தொடர்பையும் காட்டுவதாகக் கொள்ளலாம். இதற்கு வடஇந்தியக் குடியேற்றத்திற்கு முந்திய இலங்கை வரலாறு பற்றி தொல்லியல் ஆய்வுகள் கூறுவதை இவ்விடத்தில் எடுத்துக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.

நீண்டகாலமாக இலங்கையின் பூர்வீக மக்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட வரலாற்றுப் பாட நூல்களில் இலங்கையின் பூர்வீக மக்கள் வட இந்தியாவில் இருந்து விஜயன் தலைமையில் வந்த ஆரியர்களின் வழித்தோன்றல்கள் என்றே கூறப்பட்டு வந்துள்ளன. இந்நிலையில் அண்மைக் காலங்களில் இலங்கை அரசால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் வரலாற்றுப்பாட நூல்களில் விஜயன் தலைமையிலான குடியேற்றம் நடப்பதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த மக்கள், பண்பாடு பற்றிய விடயதானங்களை முதல் அத்தியாயத்தில் கூறுகின்றன. இந்த மாற்றத்திற்கு 1970 களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட நவீன தொல்லியல் ஆய்வுகள் விஜயன் வருகைக்கு முன்னரே வெவ்வேறுகாலகட்டத்தில் மூன்று வகையான பண்பாடு மக்கள் வாழ்ந்ததை வெளிச்சத்திற்கு கொண்டு வந்திருப்பதே காரணமாகும். இப்பண்பாட்டுக்குரிய மக்களையே மகாவம்சம் கூறும் இயக்கர், நாகர் என தொல்லியல், மானிடவியல், மொழியியல் அறிஞர்களும் அடையாளப்படுத்தி வருகின்றனர்.

### கற்காலப் பண்பாடு

1970களில் வடஇலங்கையில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட கலாநிதி சிரான் தெரணியகல கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுப் பகுதியில் இருந்து இற்றைக்கு 1,25000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மேலைப்பழங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களை கண்டுபிடித்தார். இந்த ஆய்வின் போது உணவு தேடி நாடோடிகளாக வாழ்ந்த இப்பண்பாட்டு மக்கள் பெரிய மிருகங்களை வேட்டையாடவும், காடுகளில் இயற்கையாகக் கிடைக்கும் காய்கனிகள், கிழங்கு வகைகளைப் பறிக்கவும்

பயன்படுத்திய பல அளவுகளில், வடிவங்களில் செய்யப்பட்ட குவாட்ஸ், சேட் கற்கருவிகளைக் கண்டுபிடித்தார். மேலும் இப்பண்பாட்டு மக்கள் இரணைமடுவில் இருந்து தெற்கே மாங்குளம், தென்மேற்கே மன்னார் வரை வாழ்ந்திருக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. இதற்கு வன்னிப்பிராந்தியத்தின் இயற்கை அமைப்பு, நடோடிகளாக வாழ்ந்த கற்கால மக்கள் தற்காலிகமாக தங்கி வாழ்வதற்குப் பொருத்தமான அடர்ந்த காடுகள், குகைகள், பாறைகள், சமவெளிகள், மிருகங்களை வேட்டையாடுவதற்குப் பொருத்தமான வைரமான கற்கள், இலகுவாக நீரைப் பெறுவதற்கு ஏற்ற இயற்கையான நீர்நிலைகள் என்பன இப்பிராந்தியத்தில் சாதகமாக இருப்பதே காரணம் எனக் கூறப்படுகின்றது. இரணைமடுவைத் தொடர்ந்து இலங்கைத் தொல்லியற் திணைக்களமும், தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களும் இணைந்தும், தனித்தும் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளில் தென்னிலங்கையில் முந்தல் போன்ற இடங்களில் இம்மேலைப் பழங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகளால் தென்னாசிவாவின் ஏனைய நாடுகள் சிலவற்றைப் போல இலங்கையிலும் கற்காலப்பண்பாட்டிற்குரிய மக்கள் வாழ்ந்துள்ளமை உறுதியாயிற்று.

2016-17 ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பிரிவினர் மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக் குளப் பிரதேசத்தில் தொல்லியல் ஆய்வில் ஈடுபட்டபோது யாழ்ப்பாண தொல்லியல் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர் திரு.மணிமாறன் செயற்கையாகச் செய்யப்பட்ட சில கற்கருவிகளைக் கண்டுபிடித்தார். அவற்றுள் ஒரு கற்கருவி காட்டுப் பகுதியில் பிறதேவைக்காக மண் அகழப்பட்ட இடத்தில் ஏறத்தாழ 12 அடி ஆழத்தில் கிரவல் மண்படையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இக்கருவி செயற்கையாக வடிவமைக்கப்பட்டதைக் கற்கருவியின் வடிவமைப்பும், அதில் பதிந்துள்ள கைவிரல் அடையாளங்களும் உறுதிசெய்கின்றன. இருப்பினும் இக்கருவியை வைத்து அதன் காலத்தையோ அல்லது அக்கருவியைப் பயன்படுத்திய மக்களையோ உறுதிப்படுத்த

முடியாது. ஒரு கருவியின் காலமும், அதன் பண்பாடும் முறையான அகழ்வாய்வில் கற்கருவிகள் கண்டிக்கப்பட்டு அதன் கலாசார மண் அடுக்குகளையும், கருவிகளுடன்இணைந்திருக்கக் கூடிய (Associate Findings) பிற ஆதாரங்களையும் நவீன ஆய்வு முறைக்கு உட்படுத்துவதன் மூலமே உறுதி செய்ய முடியும். அதற்கான வாய்ப்புகள் விரைவில் கட்டுக்கரை ஆய்வுகளுக்கு ஏற்படும் என நம்பலாம்.

மேலைப்பழங்கற்காலப் பண்பாடு (Upper Paleolithic Culture) பற்றிய ஆதாரங்கள் வடஇலங்கையிலும், தென்னிலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதன் மூலம் இலங்கையின் பூர்வீக மக்கள் பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகள் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் இப்பண்பாட்டு மக்களுக்கும் இலங்கையின் பிற்கால மக்களுக்கும் இடையே இருந்திருக்கக் கூடிய உறவு, தொடர்பு பற்றிய விரிவான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்கு மேலைப்பழங்கற்காலப் பண்பாட்டின் முடிவுக்கும், பிற்காலத்தில் தோன்றிய நுண்கற்காலப்பண்பாட்டிற்கும் இடைப்பட்ட நீண்டகால இடைவெளியில் வாழந்திருக்க கூடிய மக்கள், பண்பாடுகள் பற்றிய ஆதாரங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படாதிருப்பது முக்கிய காரணம் எனக் கூறலாம்.

## நுண்கற்கால மக்கள் (Mesolithic People)

தென்னிந்தியாவைப் போல் இலங்கையிலும் மேலைப்பழங்கற்காலப் பண்பாடு மறைந்து நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தொழில் நுட்பம் வாய்ந்த சிறிய நுண்ணிய கற்கருவிகளைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இவர்களின் நாளாந்த வாழ்க்கையில் நுண்ணிய கற்கருவிகள் முக்கிய தொழில் நுட்ப சாதனங்களாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததால் இம்மக்களை தொல்லியலாளர்கள் நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் அல்லது குறுணிக்கற்காலப் பண்பாட்டு (People of Mesolithic Culture) மக்கள் எனப் பெயரிட்டுள்ளனர். இம்மக்கள் கி.மு. 37000 இல் இருந்து மலைநாடு

தொட்டு தாழ்நிலம் வரை இலங்கையில் ஏறத்தாழ 75க்கு மேற்பட்ட இடங்களில் வாழ்ந்ததற்கான சான்றாதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. வடஇலங்கையில் மாதோட்டம், மாங்குளம், பூநகரி, இரணைமடு, புளியங்குளம், அண்மையில் கட்டுக்கரைக்குளம் ஆகிய இடங்களில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய குவாட்ஸ், சேட் கற்கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்த குகைகள் மற்றும் சமவெளிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து இப்பண்பாட்டின் தோற்றமும், மறைவும் இடத்திற்கு இடம் வேறுபட்டதாக இருப்பது தெரியவந்துள்ளது (Deraniyagala 1992: 695-701, 2004:6). இக்கால வேறுபாடுகளுக்கு தொடக்க காலத்தில குறிப்பிட்ட ஒரு இடத்தில் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் காலப்போக்கில் அவர்களின் வாழ்வியலுக்குச் சாதகமாக இருந்த இடங்களைக் கண்டறிந்து வேறுபட்ட காலங்களில் அங்கு சென்று குடியேறியிருக்கலாம், அல்லது வேறுபட்ட காலங்களில் இப்பண்பாட்டு மக்கள் இலங்கைக்கு வெளியே இருந்து வந்து குடியேறியமை காரணமாக இருக்கலாம்.

தென்னிலங்கையில் பலாங்கொடைக்கு அண்மையில் உள்ள குகைகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் காலத்தால் முந்திய நுண்கற்கால கருவிகளும், மனித எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இப்பண்பாட்டை பலாங்கொடைப் பண்பாடு எனவும், இங்கு வாழ்ந்த மனிதர்களை பலாங்கொடை மனிதன் எனவும் அழைக்கப்படுகின்றது. இப்பண்பாட்டு மக்களின் நாளாந்த வாழ்க்கையில் கற்கருவிகளே முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் மிருக எலும்புகள், மான்கொம்புகள் என்பவற்றில் வடிவமைக்கப்பட்ட முனைகள், ஊசிகள் போன்ற கருவிகளையும் பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன (Seniveratne 1085:149, Deraniyagala 1992:278-81, 2004:9). இப்பண்பாட்டு மக்களின் இருப்பிடங்கள் மிக அரிதாகவும், சிறிதாகவும் காணப்பட்டன. அவை ஏறத்தாழ 50 சதுரமீற்றரில் ஒரு சில மையக் குடும்பங்கள் வாழக் கூடிய நிலையில் அமைந்திருந்தன (Deraniyagala 1992:351, 2004:8). இறந்தவர்களை இம்மக்கள் வாழ்விடங்களிலேயே அடக்கம் செய்தனர். பாகியன் (Fa-

hein Cave) மற்றும் ரணவிலா குகைகளில் (Ranaella Cave) மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது இறந்த மனிதனின் ஒரு சில எலும்புகளை மட்டும் அடக்கம் செய்து அதன் மேல் செம்மண்ணால் பூசப்பட்டிருந்ததற்கான தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இம்மரபு அக்கால மக்களின் சமய நம்பிக்கைகளைப் பிரதிபலிப்பதாகக் கருதப்படுகின்றது (Deraniyagala 1992: 465-7, 696). பெல்லன்பண்டிபலச (Bellan-bandi-palasa) குகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து இம்மக்கள் பலவகைப்பட்ட தானியங்கள், கிழங்குவகைகள், பழங்கள், காட்டுவிலங்குகள், மீன் போன்ற கடல் உணவுகளைப் பயன்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது. இச்சான்றுகளில் இருந்து இம்மக்கள் உணவுகளைச் சேமித்து வைக்கும் பழக்கத்தையும், நெருப்பின் பயன்பாட்டையும் அறிந்திருந்தனர் என்பது மேலும் தெரியவந்துள்ளது. 30,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கணிப்பிடப்பட்டுள்ள பெலிகுகையில் (Beli Cave) இருந்து உப்பு படிமங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாதாரம் இம்மக்கள் மலைநாட்டிற்கும் கடற்கரைகளுக்கும் இடையே வலைப்பின்னலான தொடர்புகளைக் கொண்டிருந்தமை தெரிகிறது (Deraniyagala 1992:326, 2004:9).

நுண்கற்கால மக்களின் கலைப் படைப்புக்களையும், கலையுணர்வையும் அறிந்து கொள்ளக்கூடிய சான்றுகள் அதிகம் கிடைக்கவில்லை. ஆயினும் சிரான் தெரணியகல சில குகை ஓவியங்கள் நுண்கற்கால மக்களுக்கு உரியவையாக இருக்கலாம் எனக் கருதுகிறார் (*1992:465,2004:10*). குருவித்தைக்கு அண்மையில் உள்ள பட்டதொம்பா (Batadomba Cave 31,000-11,500) குகையில் இருந்து சங்கிலிருந்து வடிவமைக்கப்பட்ட மணிகள் (beds of shell), கடல் ஓடுகள், சங்கு, சிப்பி என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை அக்காலமக்களின் கலையுணர்வையும் கடற்கரையோடு இம்மக்களுக்கிருந்த தொடர்பையும் எடுத்துக்காட்டுகின்றன. அண்மையில் தொல்லியலாளர் பிரேமதிலகா ஹற்றன் சமவெளியில் கிடைத்த தானியவிதைகளை ஆய்வுக்கு (Palynological Evidence) உட்படுத்தியதில் இருந்து கி.மு 17000 இல் இருந்து வாற்கோதுமை, ஒட்ஸ் (oats) எனப்படும் தானியங்கள் இம்மக்களால்

பயிரிடப்பட்டமை தெரியவந்துள்ளது (Deraniyagala 2004:10).

நுண்கற்காலப் பண்பாடு பற்றி ஆதாரங்கள் மேலைப்பழங்கற்கால மறைவிற்குப் பின்னர் இலங்கையில் ஓரளவு நாகரிகமுடைய மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இம்மக்கள் பிற்காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு புலம்பெயர்ந்து வந்த பெருங்கற்கால (Megalithic People) அல்லது ஆதி இரும்புக்கால (Early Iron Age People) மக்கள் அறிமுகப்படுத்திய புதிய பண்பாட்டுடன் கலந்துள்ளனர். இந்த உண்மை பொம்பரிப்பு, அநுராதபுரம் அண்மையில் கட்டுக்கரைக் குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது அவ்விடங்களில் நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக அதன் மேற்படையில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சான்றுகளும், அதன் தொடர்ச்சியாக வரலாற்றுத் தொடக்ககாலச் சான்றுகளும் கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்து உறுதியாகின்றது. இந்நிலையில் கட்டுக்கரைப் பிரதேச அகழ்வாய்வின் போது பெருங்கற்காலச் சின்னங்களுடன் நுண்கற்காலக் கருவிகளும் கலந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டமை இதை மேலும் உறுதி செய்கின்றன. இம்மரபு தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டிலும் காணப்படுகின்றன. இதற்கு இலங்கைக்கு முதலில் இரும்பினை அறிமுகப்படுத்திய பெருங்கற்கால மக்கள் தமக்கு முற்பட்ட காலப் பண்பாட்டையும் உள்வாங்கிக் கொண்டனர் என்பதைக் காட்டுகிறது.



## பெருங்கற்காலப் பண்பாடு

பெருங்கற்காலப் பண்பாட்டின் அறிமுகம் இலங்கையின் பண்பாட்டு வரலாற்றில் புதியகாலகட்டத்தின் தொடக்கமாகப் பார்க்கப்படுகின்றது. இப்பண்பாட்டின் அறிமுகத்தோடு நாடோடிகளாக வாழ்ந்த இலங்கை மக்கள் ஓர் இடத்தில்

நிரந்தரமாகக் கூடி வாழ்வதற்கும், நிரந்தர பொருளாதாரம், நீர்ப்பாசன விவசாயம், குளத்தை மையப்படுத்திய கிராமக்குடியிருப்புக்கள், இரும்பின் பயன்பாடு, மிகை உற்பத்தி, சிறுதொழில்நுட்ப வளர்ச்சி, சக்கரங்களைப் பயன்படுத்தி மட்பாண்ட உற்பத்தி, பண்டமாற்று, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம், நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன தோற்றம் பெற்றன. .

பெருங்கற்காலப் பண்பாடு என்பது இறந்தவர்களுக்கான ஈமச் சின்னங்களைப் பெரிய கற்களைப் (Mega- ngupa, Lithic – கற்கள்) பயன்படுத்திக் கட்டப்பட்டதைக் குறிக்கின்றது. ஆதிகால மக்கள் இறந்தவர்களுக்கு மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையில் தமது வாழ்விடங்களை விட இறந்தவர்களுக்கு பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்களை அமைத்ததற்கான சான்றுகள் உலகின் பல நாடுகளில் காணப்படுகின்றன. ஆயினும் திராவிட மொழி பேசும் தென்னிந்திய மாநிலங்களின் பெருங்கற்காலப் பண்பாட்டில் சில தனித்துவமான அம்சங்கள் காணப்படுகின்றன. அதிலும் தென்தமிழகப் பெருங்கற்காலப் பண்பாடும் இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாடும் ஒரே பிராந்தியம் என மயங்கும் அளவிற்கு பல்வேறு அம்சங்களில் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகின்றது. அவற்றுள் இரும்பின் அறிமுகம், கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்களின் பயன்பாடு, தாழியடக்க முறை, சுடுமண் கலைவடிவங்கள் என்பவற்றில் காணப்படும் ஒற்றுமைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

இலங்கையில் இதுவரை 60க்கு மேற்பட்ட இடங்களில் பெருங்கற்காலக் குடியிருப்புக்களும், ஈமச் சின்ன மையங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பெரிய குடியிருப்பு மையமாக அநுராதபுரம் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதையடுத்து இரண்டாவது பெரிய குடியிருப்பு மையமாக வடஇலங்கையில் உள்ள கந்தரோடை அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையின் ஆரம்பகால பெருங்கற்காலக் குடியிருப்புகள் இலகுவாக நீரைப் பெறக்கூடிய மணற்பாங்கான இடங்கள், சிறிய பற்றைக் காடுகள், கடலுணவை இலகுவாகப் பெறக்கூடிய பரவைக்கடல், கடல் தரை வழிப் போக்குவரத்திற்குச்

சாதகமான இயற்கைத் துறைமுகங்கள் என்பவற்றைக் கொண்டிருந்த கடற்கரை ஓரங்களிலேயே உருவாகின. இலங்கையில் இக்குடியிருப்புகள் தமிழகத்தில் அரிக்கமேட்டுக்கு நேரெதிரே அமைந்த மாதோட்டத்திலும், ஆதிச்சநல்லூருக்கு நேரெதிரே அமைந்த புத்தளத்தில் உள்ள பொம்பரிப்பிலும் முதலில் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. இங்கு குடியேறிய மக்களே காலப்போக்கில் வளமான இடங்களைத் தேடிச் சென்று அவ்விடங்களில் குடியேறினர் (Seneviratne 1983 237 -307). அவற்றுள் பௌதிக மற்றும் கனிம வளங்களைக் கொண்டிருந்த அநுராதபுரம், கந்தரோடை, மகாகமை ஆகிய இடங்களில் பெருங்கற்காலக் குடியிருப்புக்கள் உருவாகி அவ்விடங்களில் ஆரம்பகால நகரமயமாக்கமும், அரசஉருவாக்கமும் நிகழ்ந்தன. அநுராதபுரத்தில் மிகப்பெரிய பெருங்கற்காலக் குடியிருப்புகள் தோன்றியதால் அங்கு பலமான அரச தலைநகர் தோன்றியது. இங்கு 1994 இல் இருந்து உலகப் புகழ்பெற்ற தொல்லியல் அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் கனிங்காம் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகள் நவீன காலக்கணிப்பிற்கு உட்படுத்தியதிலிருந்து இங்கு பெருங்கற்காலப் பண்பாடு தோன்றிய காலம் கி.மு. 1000 (இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னர்) எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

பாளி இலக்கியங்கள் கி.மு.6 ஆம் நூற்றாண்டிலிருந்து (இற்றைக்கு 2600 ஆண்டுகளுக்கு முன்னர்) இலங்கைக்கு வடஇந்தியக் குடியேற்றங்கள் ஏற்பட்டதாகக் கூறுகின்றன. இது பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் புலப்பெயர்வை அடுத்து 400 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட புதிய குடியேற்றமாகக் கொள்ளலாம். ஆயினும் இவ்வாறானதொரு குடியேற்றங்கள் நடந்ததற்கு நம்பகரமான தொல்லியற சான்றுகள் எவையும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதே பாளி இலக்கியங்கள் வடஇந்தியாவில் இருந்து கி.மு.3ஆம் நூற்றாண்டளவில் இலங்கைக்கு பௌத்த மதம் பரவியதாகக் கூறுகின்றது. இவற்றை உறுதிப்படுத்தும் பிராமிக் கல்வெட்டுக்களும், பௌத்தமதம் சார்ந்த தொல் பொருட் சான்றுகளும் பெரும்பாலும் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த குடியிருப்பு மையங்களிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாதாரங்கள் இங்கு வாழ்ந்த பெருங்கற்கால மக்களே புதிதாக அறிமுகமான பௌத்த மதத்தை ஏற்றுக் கொண்டனர் என்பதனை உறுதிப்படுத்துகின்றன.

பௌத்தத்திற்கு முந்திய இலங்கை மக்கள் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் ஒரே இனவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளப்படுத்தியுள்ளனர். தொல்லியலாளர் இலங்கையில் இம்மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளுக்கும் தென்னிந்தியாவில் பயன்படுத்தப்பட்ட கருவிகளுக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமை இருப்பதாகச் சுட்டிக்காட்டுகின்றனர். அல்ஜின் என்ற தொல்லியலாளர் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட இரு பக்க அலகுடைய நுண்கற்காலக் கல்லாயுதங்கள் தமிழகத்தில் பாம்பன் கடற்கரைக்கு அண்மையில் உள்ள தேரிக் கலாசாரத்துடன் ஒரே பிராந்தியம் எனக் கருதும் அளவிற்கு ஒற்றுமை கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றார் (Kennedy 1990:34). மொழியியலாளர் இலங்கையில் நுண்கற்கால மக்கள் பேசிய ஆதிஒஸ்ரிக் மொழி தென்னிந்தியாவில் நுண்கற்கால மக்கள் பேசிய ஆதிஒஸ்ரிக் மொழியோடு கொண்டுள்ள ஒற்றுமையைச் சுட்டிக்காட்டுகின்றனர். மேலும் தற்காலத்தில் இலங்கையில் பேச்சுவழக்கில் உள்ள 200க்கும் மேற்பட்ட சொற்கள் நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் பேசிய ஆதிஒஸ்ரிக் மொழிச் சொற்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வொற்றுமைகளின் அடிப்படையில் இலங்கையில் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் தென்னிந்தியா அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள தேரிமணற் குன்றுப் பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து வந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது. பேராசிரியர் இந்திரபாலா வடஇலங்கை அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடு தமிழகத்தின் தொடக்க வாயிலாக இருப்பதால் தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்த இம்மக்கள் முதலில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலேயே குடியேறியிருக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

நுண்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து இலங்கைக்குப் பரவிய பெருங்கற்காலப் பண்பாட்டை அறிஞர்கள் பலரும்

இலங்கையின் ஆக்ககாலமாகவே (Formation Period) எடுத்துக் கொள்கின்றனர். இப்பண்பாடு எங்கே தோன்றியது? எப்போது தோன்றியது? தோற்றுவித்த மக்கள் யார்? என்பது தொடர்பாக அறிஞர்களின் மத்தியில் வாதப்பிரதி வாதங்கள் உள்ளன. ஆயினும் திராவிட மொழி பேசும் மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலப் பெருங்கற்காலப் பண்பாட்டில் காணப்படும் தனித்துவமான அம்சங்கள் ஒரே பிராந்தியத்திற்குரிய பண்பாடாக தோற்றமளிக்கின்றன. இப்பண்பாட்டு வட்டத்திற்குள்ளேயே இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாடு உள்ளடக்கப்படுவதால் இப்பண்பாட்டை தென்னிந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்த திராவிட மக்களே அறிமுகப்படுத்தினர் என்பது அறிஞர்களின் பொதுவான கருத்தாகும். கலாநிதி சிரான் தெரணியாகல இப்பண்பாட்டை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர்கள் நாக இன மக்கள் எனத் தனித்து அடையாளப்படுத்திக் கூறுகின்றார் (Deraniyagala 1992:735). பேராசிரியர் இந்திரபாலா தென்தமிழக - இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கு இடையே ஈமச் சின்னங்கள், தாழியடக்க முறை, இரும்புக்கருவிகள், சமயச் சின்னங்கள், சுடுமண் உருவங்கள், கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்கள் என்பவற்றில் காணப்படும் ஒற்றுமையைச் சுட்டிக்காட்டி நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக பெருங்கற்காலப் பண்பாடும் தென்தமிழகத்தில் இருந்தே இலங்கைக்குப் பரவியதாகக் கூறுகின்றார் (இந்திரபாலா 2006). இவ்வாதாரங்களில் இருந்து பௌத்தத்திற்கு முந்திய இலங்கை மக்களும், பண்பாடும் தமிழகத்தில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டவை என்பது தெரிகிறது. இதனால் பௌத்த மதத்தின் பரவலோடு இலங்கையில் தோன்றிய மொழிவழிப் பண்பாடுகளை பௌத்தத்திற்கு முற்பட்ட பெருங்கற்கால மக்கள், பண்பாடு என்பவற்றுடன் தொடர்புபடுத்தி ஆராய்வதே பொருத்தமாகும்.


இலங்கைக்கு விஜயன் யுகத்திற்கு முந்திய வரலாறு உண்டு என்பதற்கு தொல்லியற் கண்டுபிடிப்புக்களை ஆதாரங்களாகக் காட்டியிருக்கும் பேராசிரியர் சேனக பண்டாரநாயக்கா இலங்கை மக்களின் இன அடையாளங்களுக்கு உடற்கூற்றியல் வேறுபாடுகள்

காரணமல்ல, பண்பாட்டு வேறுபாடுகளே காரணம் எனக் கூறி அப்பண்பாட்டு வேறுபாடுகளை இலங்கையில் மனித நாகரிக வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து ஆராய்ந்து பார்க்க வேண்டுமென வலியுறுத்துகின்றார் (சேனகபண்டாரநாயக 1985:1-23). அண்மையில் "வல்லியக்கனும் வல்லிபுரநாதரும்" என்ற பொருளில் கலாநிதி பொ.இரகுபதி எழுதிய கட்டுரையொன்றில் இலங்கைத் தமிழரது பண்பாட்டு அடையாளங்கள் பூர்வீக மக்களது பண்பாட்டிலிருந்து தொடங்க வேண்டும் எனக் குறிப்பிட்டு, இதற்கு. 2500 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர் வழிபாட்டில் இருந்து வந்த இயக்கர் வழிபாடு எவ்வாறு அண்மைக் காலங்களில் வல்லிபுரநாதர் ஆலயமாக மாறியதென்பதற்கு பொருத்தமான ஆதாரங்களைக் காட்டியிருந்தார் (இரகுபதி 2006:1-23). தற்காலத்தில் தமிழர் சமூகத்தில் மாடுகளுக்கு இடப்படும் குறியீடுகள், சலவைத் தொழிலாளர் பயன்படுத்தும் அடையாளச் சின்னங்கள் என்பவற்றின் வரலாற்றை பின்னோக்கிப் பார்த்தால் அவை வரலாற்றுக் காலத்தில் கல்வெட்டுக்கள், நாணயங்களில் பயன்படுத்தப்படுவதற்கு முன்னரே அவை பெருங்கற்கால மக்களின் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டதற்கு அவர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களில் பொறித்துள்ள குறியீடுகள், சின்னங்கள் என்பன சான்றாகக் காணப்படுகின்றன (புஷ்பரட்ணம்: 1999: 62-67). இவ்வாதாரங்கள் இலங்கைத் தமிழர் வாழ்வியலுடன் இணைந்திருக்கும் நாக மரபிற்கும் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் தொடர்பு இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

தென்னாசிய நாடுகள் பலவற்றில் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் இருந்து நாகத்தைக் குலமரபுத் தெய்வமாக கொண்ட மக்கள் வாழ்ந்தற்கு நம்பகரமான தொல்லியல் ஆதாரங்கள் காணப்படுகின்றன. இந்நாக வழிபாட்டு மரபு வடஇந்தியா, தக்கணம், தென்னிந்தியா, தமிழகம், தென் தமிழகம் ஆகிய வட்டாரங்களிலும், வட்டாரங்களுக்கு உள்ளேயும் வேறுபட்ட காலங்களில், செம்புக்காலம் (Chalcolithic Culture) , புதியகற்காலம் (Neolithic Culture), நுண்கற்காலம் (Mesolithic Culture), பெருங்கற்காலம் (Megalithic Culture) முதலான பண்பாடுகளின் உருவாக்கத்துடன் தோன்றியதை தொல்லியல் ஆதாரங்கள் மேலும் உறுதிசெய்கின்றன.

நடாத்தப்பட்டன. இந்த ஆய்வு நடவடிக்கைகளின் போது தென்னிலங்கைத் தொல்லியல் அறிஞர்களின் ஆலோசனைகளும், வழிகாட்டுதலும் அவ்வப்போது பெறப்பட்டன. இந்த நினைவுப் பேருரையின் பிரதான நோக்கம் பெருங்கற்காலப்பண்பாட்டிற்கும் நாக மரபிற்கும் இடையிலான தொடர்பை எடுத்துக்காட்டுவதாகும். ஆயினும் கட்டுக்கரை ஆய்வுகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து கி.பி.13ஆம் நாற்றாண்டு வரையான வடஇலங்கை வரலாறு பற்றிய எதிர்கால ஆய்வுகளுக்குப் புதுச் செய்திகளைச் சொல்வதால் அவற்றை இவ்விடத்தில் சுருக்கமாகக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.

வடஇலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய பெருங்கற்காலக் குடியிருப்பு மையமாக கட்டுக்கரை அடையாளம் காணப்பட்டுள்ளது. இக்குடியிருப்பை அநுராதபுரத்திற்கு அடுத்த நிலையில் உள்ள மிகப்பெரிய பெருங்கற்கால ஊரிருக்கைப் பகுதியாக எடுத்துக் கொள்ளலாம். பெருங்கற்காலப் பண்பாட்டில் குடியிருப்பு, ஈமக்காடு, குளம் என்பன ஒருங்கே அமைந்திருப்பது அப்பண்பாட்டின் முக்கிய அம்சமாகும். இலங்கையில் இந்த நான்கு அம்சங்களும் ஒரேயிடத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் கட்டுக்கரை அகழ்வாய்வில் இந்த நான்கு அம்சங்களும் முதல் முறையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெருங்கற்கால ஈமச் சின்னங்களுள் ஈமப்பேழையும் ஒன்றாகும்.



இலங்கையில் முதன்முறையாகக் கட்டுக்கரை அகழ்வாய்வில் தாழியடக்க முறையுடன், ஈமப்பேழையும் ஈமச் சின்னமும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. வரலாற்று மூலங்கள் பலவும் இலங்கையின் வரலாற்றுப் பழமைவாய்ந்த துறைமுகமாக மாதோட்டத்தைக் கூறுகின்றன. அங்கு 1825இல் இருந்து அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் அங்கு கண்டுபிடிக்கப்படாத தொன்மைச் சான்றுகள் கட்டுக்கரையில்

இலங்கைக்குரிய பெருங்கற்காலப் பண்பாடு தென்தமிழகத்தில் இருந்து பரவியதற்கே அதிக சான்றுகள் காணப்படுகின்றன. கலாநிதி சிரான் தெரணியாகல நாகர்களே இலங்கைக்குப் பெருங்கற்காலப் பண்பாட்டை பரப்பியவர்கள் எனக் கூறுகின்றார். 1960 களில் புத்தளம், பொம்பரிப்பு பெருங்கற்காலப் பண்பாடு பற்றி ஆராய்ந்த பேராசிரியர் பரணவிதானாவும் இக்கருத்தையே முதலில் முன்வைத்துள்ளார். பேராசிரியர் இந்திரபாலா பௌத்த மொழியான பிராகிருத மொழியை ஏற்றுக் கொண்ட மக்கள் அம்மொழி சார்ந்த இனக்குழுவாக உருவாகிக் கொண்டிருந்தபோது நாக இன மக்கள் தமிழ் மொழி பேசும் இனக்குழுவாக உருவாகி வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழத் தொடங்கினர் எனக் கூறுகிறார். இந்நிலையில் வடஇலங்கையில் கட்டுக்கரை, நாகபடுவான் ஆகிய பெருங்கற்கால மையங்களிலும் நாக வழிபாட்டுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இம்மக்களிடையே நாகத்தை குலமரபுத் தெய்வமாக வழிபடும் மரபு தோன்றிவிட்டதை உறுதி செய்வதாக உள்ளது.

கட்டுக்கரைத் தொல்லியல் மையம் வடஇலங்கையில் மன்னார் மாவட்டத்தில் இருந்து வடகிழக்கே 26 கி.மீ. தொலைவில் வட்டக்கண்டல் பிரதேசத்திற்கு அண்மையில் அமைந்துள்ள சிறிய கிராமமாகும். குளத்தை மையப்படுத்தி தோன்றிய இக்கிராமத்தின் பெயர் சிங்களத்தில் யோதவெவ எனவும், தமிழில் கட்டுக்கரைக்குளம் எனவும் அழைக்கப்படுகின்றது. ஆயினும் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இக்குளம் உட்பட அதைச் சுற்றியமைந்த சில கிராமங்கள் பாலப்பெருமாள் கட்டு என்றே அழைக்கப்பட்டது. இலங்கையில் வரலாற்றுப் பழமை வாய்ந்த பெருங்குளங்களில் ஒன்றான இக்குளத்திற்குத் தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு. 2016, 2017 காலப்பகுதியில் எமது பல்கலைக்கழகத் தொல்லியல் பிரிவு ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியற் திணைக்கள மற்றும் மத்திய கலாசார நிதியம் என்பவற்றின் தொல்லியல் ஆய்வு உத்தியோகத்தர்களின் துணையோடு இரண்டு இடங்களில் அகழ்வாய்வும், ஏறத்தாழ நான்கு மைல் சுற்றுவட்டத்தில் தொல்லியல் மேலாய்வுகளும்

நாம் முன்வைத்திருக்கும் கருத்துக்கள் பலவற்றை தமது ஆய்வு அறிக்கையில் அழுத்தமாகச் சுட்டிக்காட்டியுள்ளதை இவ்விடத்தில் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

எமது தொல்லியல் அகழ்வாய்வின் போது பெருங்கற்காலக் குடியிருப்புப் பகுதியிலிருந்து வெளிவந்த சமயச் சின்னங்கள் பொது மக்கள் பலரின் கவனத்தைக் கட்டுக்கரையின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. நன்கு திட்டமிடப்பட்ட முறையில் கட்டுக்கரைக்குளத்தின் கரையோரமாக உள்ள காட்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் ஆறு மீற்றர் நீளமும், மூன்று மீற்றர் அகலமும் கொண்ட ஆறு குழிகளில் அதன் இயற்கை மண் அடையாளம் காணப்படும் வரை அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. .மூன்று வேறுபட்ட கலாசாரமண் அடுக்குகளைக் கொண்ட இவ்வாய்வுக் குழிகளின் மூன்றாவது கலாசாரமண் அடுக்கில் செங்கட்டிகள் கொண்டு கட்டப்பட்ட அத்திவாரத்தின் ஒரு பகுதி கண்டுபிடிக்கபபட்டுள்ளது. ஏனைய பகுதி குளத்திற்குள் புதையுண்டு இருப்பதை நீரலையினால் கரையோரத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் செங்கற்களும், பிற தொல்பொருட்ச் சான்றுகளும் உறுதிசெய்கின்றன. இக்கட்புட ஆதாரங்கள் இவ்விடத்தில் பழமையான ஆலயம் அல்லது சமயச் சடங்கு நடந்த மண்டபம் இருந்திருக்கலாம் என்பதை உறுதிப்படுத்துகின்றன. மேலும் இக்கட்டப் பகுதியில் இருந்தே பெருமளவு சுடுமண் சிற்பங்கள், சிலைகள், மணிகள், யானை, குதிரை, நந்தி, முதலான தெய்வ வாகன ங்களின் பாகங்கள், அகல் விளக்குகள், தீபங்கள், சமயச்சின்னங்கள்,இலட்சனைகள், குறியீடுகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கலைவடிவங்கள் பெரும்பாலானவை



களிமண் அல்லது களி மண்ணுடன் குருமணல், நெல் உமி அல்லது வைக்கோல் என்பன கலந்து உருவாக்கப்பட்டு பின்னர் அவை

கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. கட்டுக்கரையில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களிடையே இரும்பு, கல்மணி, சங்கு, மட்பாண்டம் என்பவற்றை உற்பத்தி செய்யும் சிறுதொழிற்சாலைகள் இருந்தமைக்கான உபகரணங்களும், உற்பத்திப் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு வேண்டிய கார்ணீலியன் கல்வகைகளும், விலையுயர்ந்த மட்பாண்டங்களும் தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதற்கான ஆதாரங்களும் கிடைத்துள்ளன. இங்கு கிடைத்துவரும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்குரிய தொன்மைச் சான்றுகள் பண்டைய காலத்தில் அநுராதபுரத்திற்கும் மாதோட்டத்திற்கும் இடைப்பட்ட தரைவழிப் பாதையில் கட்டுக்கரை ஒரு நகரமாக வளரச்சி அடைந்ததை உறுதிப்படுத்துகின்றன.

தென்னாசியாவில் பிராமி எழுத்து தோன்றுவதற்கு முன்னர் மக்களிடையே குறியீடுகள் ஒரு தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிந்துவெளி நாகரிகத்தில் தோன்றிய இக்குறியீடுகள் மேற்கிந்தியா ஊடாக பெருங்கற்காலப் பண்பாடு வரை தொடர்ந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இக்குறியீடுகள் பற்றி ஆராய்ந்த பி.பி.லால், யஸ்தானி போன்ற அறிஞர்கள் பெருங்கற்காலப் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட 80 வீதமான குறியீடுகள் சிந்துவெளி நாகரிகத்தில் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளை ஒத்திருப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். இக்குறியீடுகளில் இருந்தே பிராமி எழுத்து தோன்றியதை அண்மைக்கால ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. கட்டுக்கரை அகழ்வாய்வில் ஈமச்சின்னங்களுடன் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களில் சிலவகையான குறியீடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இக்குறியீடுகளை ஆய்வு செய்த தென்னிந்தியாவின் முதன்மைத் தொல்லியலாளர்களில் ஒருவரான பேராசிரியர் இராஜன் கட்டுக்கரை பெருங்கற்காலக் குடியிருப்புகளின் தோற்றம் தமிழகத்தின் மிகப்பெரிய குடியிருப்பு மையமான கொடுமணலின் சமகாலமாக அல்லது அதற்கு முற்பட்டகாலமாக இருக்கலாம் எனக் கூறுகிறார். அண்மையில் கட்டுக்கரைப் பிரதேசத்தில் அகழ்வாய்வை மேற்கொண்ட இராஜரட்டைப் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வுக்குழுவினரும்

கண்டுபிடிக்கப்பட்டமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவ்வாதாரங்களிடையே யானை அல்லது குதிரையின் மேலமைந்திருந்த பீடத்தில் தெய்வீக கோலத்தில் இரு கால்களையும் கீழே தொங்கவிடப்பட்ட நிலையில் இருக்கும் இரு பெண் தெய்வங்களின் அரிய சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை ஐயனாரின் இரு தேவியர்களைக் குறிப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர். இவற்றைத் தவிர ஆண், பெண் தெய்வங்களின் தலை உருவங்கள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை ஐயனார், ஐயனாரின் தேவியர்களின் சிலைகளின் உடைந்த பாகங்களாக இருக்கலாம்.

இங்கு ஐயனார் வழிபாட்டுக்குரிய சான்றுகளுடன் சிவன், முருகன், விநாயகர், அகத்தியர் முதலான வழிபாட்டுக்குரிய சான்றுகளும் கிடைத்துள்ளன. இவ்வாதாரங்கள் பிற்கால ஐயனார் ஆலயங்களில் பிறதெய்வங்களையும் வைத்து வழிபடப்படும் மரபு பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்திலிருந்தே தோன்றியதைக் காட்டுகின்றது எனக்கூறலாம் அல்லது பொருளாதாரச் செழிப்பு, பாதுகாப்பு என்பவற்றை வேண்டி ஐயனாரை வழிபாடு செய்த மக்கள் தமது குலத் தெய்வங்களின் உருவங்களை, சின்னங்களை மண்ணிலே செய்து ஐயனாருக்கு காணிக்கையாக வழங்கியிருக்கலாம் அல்லது அவ்விடத்தில் வைத்து வழிபட்டிருக்கலாம் எனக் கருதலாம். இங்கு கண்டுபிடிக்கப்பட்ட நந்தி, ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம், திரிசூலம் என்பன சிவ வழிபாடு இங்கிருந்ததை உறுதி செய்கின்றன. நந்தி, ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் முதலான சுடுமண் சிற்பங்கள் முதன் முறையாக கட்டுக்கரை பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்தே கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை முக்கியமாக நோக்கத்தக்கது. தமிழக ஆதிச்சநல்லூர் பெருங்கற்காலப் பண்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட முருக வழிபாட்டிற்குரிய வேலும், சேவல் சின்னமும் இரும்பால் செய்யப்பட்டிருந்தன. ஆனால் கட்டுக்கரையில் முருகவழிபாட்டை நினைவுபடுத்தும் மயில் சின்னங்களும், அதன் இறகும் சுடுமண் உருவங்களாகக் கிடைத்திருப்பது அவ்வழிபாட்டின் தொன்மையைக் காட்டுவதாக உள்ளது. கட்டுக்கரை அகழ்வாய்வின் போது மிகச் சிறிய கலசங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின்

சுடப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவை தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சமயச் சின்னங்களைப் பெருமளவு ஒத்ததாகக் காணப்படுகின்றன. தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை இந்து ஆலயங்களும், அவை சார்ந்த கலைவடிங்களும் அழியக்கூடிய மண், மரம், சுதை என்பன கொண்டு அமைக்கப்பட்டவையாகும். இதைச் சமகாலப் பழந்தமிழ் இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் உறுதிசெய்கின்றன. இம்மரபே சமகால இலங்கையிலும் பின்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதற்கு கட்டுக்கரை அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட சமயச் சின்னங்கள் மேலும் சிறந்த சான்றுகளாகும்.

கட்டுக்கரை அகழ்வாய்வில் சிவன், முருகன், விநாயகர், அகத்தியர், நாகபாம்புகள் முதலான வழிபாடுகளுக்குரிய சின்னங்கள், சிற்பங்கள், சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அவற்றுள் ஐயனார் வழிபாட்டுக்குரிய சான்றுகளே அதிக அளவில் கிடைத்துள்ளன. இவற்றின் அடிப்படையில் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஆலயத்தை ஐயனாருக்குரிய ஆலயமாக அல்லது ஐயனார் வழிபாட்டுச் சடங்கு நடந்த இடமாக எடுத்துக் கொள்வதே பொருத்தமாகும். தென்தமிழகத்திலும், இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றிய குளக்குடியிருப்பில் ஐயனாரை முக்கிய தெய்வமாக வழிபடும் மரபு இருந்துள்ளது. இது பொருளாதரச் செழிப்பிற்காகவும், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் கொடிய மிருகங்கள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கவும் மக்களால் வழிபடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதற்கு தமிழகத்தில் மதுரை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகத் தொன்மையான ஐயனார் வழிபாட்டுக்குரிய சின்னங்கள் சிறந்த சான்றாகும். வன்னியிலும் பண்டு தொட்டு ஐயனார் ஒரு முக்கிய தெய்வமாக வழிபடப்பட்டு வருவதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. கட்டுக்கரை அகழ்வாய்வுகளில் ஐயனார் தெய்வத்தை அடையாளப்படுத்தும் நூற்றுக்கணக்கான யானை, குதிரை என்பவற்றின் உடற்பாகங்கள், தலைப்பகுதிகள், 75 இற்கும் மேற்பட்ட யானைத் தந்தங்கள், 50இற்கும் மேற்பட்ட யானை, குதிரை, நந்தி முதலான வாகனங்களின் கழுத்தில் அணியப்பட்டிருந்த மணிகள் என்பன


மத்தியில் காணப்படும் அரைவட்ட வளைவு நாகச் சிற்பம் இன்னொரு உருவத்தில் வைக்கப்பட்டிருந்ததைக் காட்டுகிறது. இது பிற்கால நாக வழிபாட்டு மரபை நினைவுபடுத்துவதாக உள்ளது. சமகாலத் தொல்லியல் ஆய்வில் இனத் தொல்லியல் (Ethno Archaeology) முக்கிய இடத்தைப் பெற்று வருகிறது. இது குறிப்பிட்ட இனத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலான நீண்டகால வரலாற்றுத் தொடர்பை ஆராய்கின்றது. இன்று கட்டுக்கரையிலும், பொதுவாக வன்னியிலும் முக்கியத்துவம் பெற்றிருக்கும் நாக வழிபாட்டு ஆலயங்களின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் அவற்றுள் சிலவற்றின் தொடக்கம் பெருங்கற்காலப் பண்பாடாக இருக்கலாம் என்பதற்கு கட்டுக்கரை அகழ்வாய்வு சிறந்த உதாரணமாகும்.

கட்டுக்கரையைத் தொடர்ந்து வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இன்னொரு முக்கிய பெருங்கற்கால பண்பாட்டு மையமாக நாகபடுவான் என்ற இடம் காணப்படுகின்றது. இவ்விடம் பூநகரிப் பிராந்தியத்தில் முழங்காவிலுக்கு அண்மையில் காட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்கள் இலங்கையில் நாக வழிபாட்டு மரபு தோன்றி வளர்ந்த வரலாறு பற்றிய எதிர்கால ஆய்வுகளுக்குப் புதிய செய்திகளை கூறுவதாக இருக்கின்றன. எமது அறிவுக்கு எட்டியவரை இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சில வகையான சான்றுகள் தென்னாசியாவின் ஏனைய வட்டாரங்களில் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. இதுவே இந்திய இலங்கைத் தொல்லியல் அறிஞர்களிள் பலரின் கருத்தாகவும் உள்ளது.

இங்கே நாகபடுவான் என்ற இடப்பெயரின் பழமை, அதன் பொருள் ஆய்வுக்கு உரியது. நாகபடுவான் என்ற பெயர் ஐரோப்பியர் ஆட்சியில் பூநகரியில் ஒரு பரந்த பிரதேசத்திற்குரிய பெயராக இருந்தது. காலப்போக்கில் இப்பிரதேசத்தின் ஒருபகுதி பயிர்ச்செய்கைக்கு பயன்படாது போனதால் அந்நிலப்பகுதி கரியலை நாகபடுவான் என தனியொரு கிராமத்தின் இடப்பெயராக அழைக்கப்படுகின்றது. பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கிய பண்பாட்டு அம்சங்களில் ஒன்று குளத்தை மையப்படுத்திய கிராமக்

வாய்ப்பகுதியில் இருந்து ஏதோவொரு தெய்வ உருவம் வெளிவருவது போன்ற தோற்றப்பாடு காணப்படுகின்றது. வரலாற்றுக் கதைகளில் அகத்தியரை குடமுனி என அழைக்கும் மரபு காணப்படுவதுடன், அகத்தியர் வழிபாடு இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்குப் பரவியதாகவும் கூறப்படுகிறது. இதனால் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட சிறிய கலசங்கள் அகத்தியர் வழிபாடு இங்கிருந்ததை நினைவுபடுத்துவதாக இருக்கலாம். ஆயினும் தமிழக இலங்கைப் பெருங்கற்கால மையங்களில் இதுபோன்ற கலசங்கள் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை.

பண்டு தொட்டு ஐயனார் வழிபாட்டு ஆலயங்களுடன் இணைந்த ஒன்றாக நாகவழிபாடு காணப்படுகிறது. இன்றும் கிராமப்புறங்களில் மரங்களின் கீழ் அமைந்துள்ள ஐயனார் ஆலயங்களில் நாகபாம்புகளை வைத்து வழிபடும் மரபைக் காணமுடிகின்றது. இம்மரபு பெருங்கற்காலப் பண்பாட்டிலேயே தோன்றிவிட்டதை கட்டுக்கரை அகழ்வாய்வுகள் உறுதி செய்கின்றன. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது இலகுவாக சிற்பங்களைச் செதுக்கக் கூடிய வெண்மையான கற்கள் சில கண்டு பிடிக்கப்பட்டன. அக்கற்களில் காணப்படும் உருவத்தை ஆய்வு செய்த தமிழக ஆய்வாளர்கள் அவற்றில் உள்ள உருவம் நாக பாம்பைப் பிரதிபலிப்பதாகக் கூறுகின்றனர். மேலும் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட நாக உருவங்கள் வேறுபட்ட தோற்ற அமைப்பில் காணப்படுகின்றன. நீண்ட பெரிய நாக உருவங்களில் சில சாதாரணமாகப் படுத்த நிலையில் காணப்படுகின்றன. ஏனைய நாக உருவங்கள் வளைந்து படமெடுப்பது போன்ற தோற்றத்தில் வாயைப் பிளந்த நிலையில் காணப்படுகின்றன. சிறிய சில நாக உருவங்கள் படமெடுப்பது போன்ற தோற்றத்தில் காணப்படுகின்றன. இவை மண் சட்டியில் வைத்து வழிபடப்பட்டவையாக இருக்கலாம். சில சிறிய நாக உருவங்கள் பீடத்துடன் காணப்படுகின்றன. இச் சிறிய பீடத்தின்



புராதன மட்பாண்டங்கள், இரும்புக் கருவிகள் (Irorn Slakes), பெருங்கற்காலத் தாழிகளின் பாகங்கள் (4ஆம், 5ஆம் ஆய்வுகுழியில் கண்டுபிடிக்கப்பட்டவை) நாகபடுவானின் தொடக்ககால மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டிற் குரியவர்கள் என்பதை உறுதிசெய்கின்றன. ஆயினும் கட்டுக்கரையில் கண்டு பிடிக்கப்பட்டது போன்ற செறிவான ஆதாரங்கள் நாகபடுவானில் இதுவரை கிடைக்கவில்லை. தொடர்ந்து இவ்விடத்தில் அகழ் வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் அதிக சான்றுகள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

நாகபடுவானில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது 1ஆம், 2ஆம், 3ஆம் ஆய்வுக் குழிகளில் இருந்து பெருமளவு சமயச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இச்சின்னங்கள் இந்து மதத்திற்கு முன்னோடியாக (Proto Hinduism) பெருங்கற்கால மக்களிடையே இருந்த சமய நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதாக உள்ளன. இச்சமயச் சின்னங்கள் பெரும்பாலும் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட சின்னங்களைப் போல் களிமண், குருமணல், உமி அல்லது வைக்கோல் என்பன கலந்து செய்யப்பட்டு பின்னர் நெருப்பினால் சுடப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவற்றின் வெளித்தோற்றம் முழுமையாகக் காணப்பட்டாலும் அவற்றின் உட்பகுதி வெறுமையாகவே காணப்படுகின்றது. இவ்வாறான கலைமரபு, தொழில்நுட்பம் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றியதற்கு தமிழகத்திலும், இலங்கையிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன.

நாகபடுவான் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட 99 வீதமான சமயச் சின்னங்கள் இங்கு வாழ்ந்த மக்கள் நாக வழிபாட்டுடன் ஒன்றிணைந்திருந்ததைப் பட்டுவர்த்தனமா உறுதிப்படுத்துகின்றன. அச்சான்றுகள் 1ஆம், 2ஆம், 3ஆம் அகழ்வாய்வுக் குழிகளில் மிகச் செறிவாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இக்குழிகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான ஆண் பெண் தெய்வச் சிலைகள், சிற்பங்கள், அவற்றுடன் இணைந்திருந்த பீடங்கள், நாகக் கற்கள், பயன்படுத்தப்பட்ட அடுப்புகள், தீபச் சட்டிகள், மண் தட்டுக்கள், பல



290303

குடியிருப்புகளின் தோற்றமாகும். பிராமிக் கல்வெட்டுக்களிலும், சமகாலப் பாளி இலக்கியங்களிலும், பெருங்கற்கால மையங்களை அண்டிய இடப்பெயர்களுள் குளத்தைக் குறிக்கும் ஆவி, வாவி, மடு, குளம், பழை, வேலி முதலான பின்னொட்டுச் சொற்களுடன் முடிவதற்கு இதுவே காரணமாகும். வடஇலங்கையில் அதிலும் குறிப்பாக வன்னியில் 2000 க்கும் மேற்பட்ட இடப்பெயர்கள் குளம் என்ற பின்னொட்டுச் சொல்லைக் கொண்டுள்ளன. இதற்கு இவ்விடங்களில் பல, ஆதியில் பெருங்கற்காலக் குளக்குடியிருப்புக்களைக் கொண்டிருந்ததே காரணமாகும். இங்கே நாகபடுவான் என்ற இடப்பெயர் நாககுளம் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. படுவம், படுவான் என்பது பழமையான தமிழ்ச்சொல். இது சங்க இலக்கியத்தில் ஆழமான குளம், பெரிய குளம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நாககுளம் என்ற பொருளைக் கொண்ட இடப்பெயரே இன்றும் மாற்றம் அடையாது நாகபடுவான் என்ற பண்டைய தமிழ்ச் சொல்லில் அழைக்கப்படுகிறது எனலாம். கலாநிதி இரகுபதி நாகபடுவான் என்ற இடப்பெயர் ஆதியில் இங்கு நாகத்தைக் குலமரபாகக் கொண்ட மக்கள் வாழ்ந்ததன் காரணமாகத் தோன்றியது எனக் கூறுகிறார். நாகபடுவானில் அகழ்வாய்வுக்கு உட்பட்ட காட்டுப்பகுதியில் கானமோட்டை என்ற பழைய குளத்தின் அழிபாடுகள் காணப்படுகின்றது. கானமோட்டை என்பதற்கு காட்டில் இருந்த குளம் அல்லது நீர்நிலை எனப்பொருள் கொள்ளலாம். பழந்தமிழ் இலக்கியத்தில் மோட்டை என்பதற்கு வயற்பரப்பிற்கு நீர் செல்லும் பாதை எனக் கூறப்படுகின்றது. இப்பழமையான பெயர்கள் இப்பிரதேசத்தில் புராதன குளக்குடியிருப்புகள் தோன்றியிருந்ததை மேலும் உறுதிசெய்கின்றன.

நாகபடுவானில் 4 x 3 மீற்றர் நீள அகலத்தில் ஆறு குழிகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் இயற்கை மண் அடையாளம் காணும்வரை அகழ்வு செய்யப்பட்டது. இவற்றின் கலாசார மண் அடுக்குகளின் எண்ணிக்கைகள் அகழ்வுக்குழிகளுக்கு இடையே வேறுபட்டுக் காணப்பட்டாலும் மூன்றாவது கலாசார மண் அடுக்குகளிலேயே அதிக அளவிலான தொல்லியற் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்குழிகளில் கண்டுபிடிக்கப்பட்ட

சிலைகளின் தலைப்பாகங்கள், உடம்பு பகுதிகள், கை, கால் உறுப்புகள் அவற்றில் அணியப்பட்ட கைவளையல்கள், கழுத்துமாலைகள், காற்சலங்கைகள், தலை முடிகள், காது அணிகலங்கள், ஆடை அமைப்புக்கள் என்பவற்றை ஆதாரங்களாகக் கொண்டு ஆண், பெண் சிலைகளை வேறுபடுத்தி அடையாளம் காண முடிகிறது. இச்சிலைகள் பெரும்பாலும் பீடத்தில் அமர்ந்திருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதை சிலைகளுடன் காணப்பட்ட பீடங்கள் உறுதி செய்கின்றன. இப்பீடங்கள் பல அளவுகளில் சதுரமாகவும், வட்டமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. பீடத்தில் அமர்ந்துள்ள தெய்வங்கள் வலது காலை மடித்து, இடது காலைத் தொங்கவிட்ட நிலையில் ஏதோ வரம் அளிப்பது போல் காணப்படுகின்றன. இதனால் இச்சிலைகளை நாக வழிபாட்டு ஆலயங்களில் காணப்படும் நாக, நாகினி தெய்வங்களாகக் கொள்ளலாம்.

பிற்காலத்தில் இலங்கைத் தமிழரிடையே மரநிழலின் கீழ் அல்லது சிறிய ஆலயங்களில் நாகக் கற்களை வைத்து வழிபடும் மரபு காணப்படுகின்றது. அக்கற்கள் பெரும்பாலும் கருங்கற்களை சதுரமாக அல்லது வட்டமாக வெட்டி கல்லின் மேற்பகுதியில் நாகபாம்பு படமெடுத்த நிலையிலும், கல்லின் கீழ்பகுதியில் அதன் உடற்பகுதி கல்லைச்சுற்றி வளையங்களாகவும் செதுக்கப் பட்டிருக்கும். இம்மரபு பெருங்கற்கால பண்பாட்டிலேயே தோன்றியிருக்கலாம் என்பதை நாகபடுவான் அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. இங்கு அதிக எண்ணிக்கையில் நாகக் கற்கள் கிடைத்துள்ளன. இவை கற்களுக்குப் பதிலாக மண்ணால் வட்டவடிவில் செய்யப்பட்டு பின்னர் நெருப்பில் சுடப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இச்சுடுமண் நாகக் கற்களில் நாகத்தின் உடற்பாகங்கள் வளையங்களாகச் செய்யப்பட்டு அதன் மேற்பாகம் வட்டவடிவில் அழகாக வடிமைக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இதன் மேற்பகுதியில் நாக பாம்பு இணைந்திருந்த நிலையில் இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை. ஆயினும் இந்நாகக் கற்களுக்கிடையே தனியாகப் படமெடுத்த நாகச் சிற்பங்கள் கிடைத்துள்ளன. அவை நாகக் கற்களின் மேற்பகுதியில் வைக்கப்பட்ட நாகச் சிற்பங்களாக இருக்கலாம்.

அளவுகளில் செய்யப்பட்ட நாகச் சிற்பங்கள் என்பன அதிக எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் இவ்விடத்தில் நாக வழிபாட்டு ஆலயம் ஒன்று இருந்திருக்கலாம் என எண்ணத் தூண்டுகின்றது. பெருங்கற்கால மக்கள் வைரமான கற்களில் துவாரங்களை இட்டு அவற்றில் மரங்களை நாட்டி மண், மரம், இலைகள் என்பன பயன்படுத்தித் தமக்குரிய இருப்பிடங்களை அமைத்து வாழ்ந்தவர்கள். 2011ஆம் ஆண்டு இலங்கைத் தொல்லியற் திணைக்களத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பிரிவினர் இணைந்து கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வாய்வில் சமையல் அறையுடன் கூடிய பெருங்கற்கால மக்களது இருப்பிடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

பண்டைய இலக்கியங்கள் சங்க காலத்தில் இருந்த ஆலயங்கள், அவற்றில் வைத்து வழிபடப்பட்ட சிலைகள் சிற்பங்கள் பற்றிக் கூறுகின்றன. அதே இலக்கியங்கள் அக்கலை வடிவங்கள் அழியக் கூடிய மரம், மண், சுதை என்பன கொண்டு அமைக்கப்பட்டதாகக் கூறுகின்றன. தமிழகத்திலும் இலங்கையிலும் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னர் பெரும்பாலும் இக்கலை மரபே பின்பற்றப்பட்டு வந்துள்ளது. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனது மண்டகப்பட்டு கோவில் கல்வெட்டு அவனது ஆட்சியில் இருந்தே அழியாத கற்களைக் கொண்டு ஆலயங்கள் கட்டப்பட்டதாகக் கூறுவதில் இருந்து இது மேலும் உறுதியாகின்றது. இதே போல் நாகபடுவானில் இருந்த நாக வழிபாட்டு ஆலயமும் அழியக் கூடிய மண், மரம், சுதை கொண்டு கட்டப்பட்டதால் அவை காலப்போக்கில் அழிவடைந்து குறிப்பிட்ட இடத்தில் குவியலாகக் காணப்படக் காரணம் எனலாம். இச்சான்றுகளுடன் அரிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட சிவலிங்கம், கருடன், ஆமை முதலான சிற்பங்கள் நாக ஆலயத்தோடு இணைந்திருந்த பிறதெய்வங்களைக் குறிப்பதாக இருக்கலாம்.


இங்கு கண்டுபிடிக்கப்பட்ட நாக வழிபாட்டுச் சின்னங்களுள் ஆண், பெண் தெய்வச் சிலைகள் சிறப்பாக நோக்கத்தக்கது. இவை சுடுமண் சிலைகளாக இருப்பதால் அவை பெரிதும் சிதைவடைந்த நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் சிதைவடைந்த

முதன்மைத் தெய்வமாக காட்டுவதற்காக செய்யப்பட்ட ஒரு அமைப்பாக இருக்கலாம் எனக் கூறலாம். இதை இங்குள்ள பானையில் இருந்து எடுக்கப்பட்ட நாக உருவமும் உறுதிப்படுத்துகிறது.


தமிழரிடையே பாம்பு புற்றை வழிபடும் மரபு மிகத் தொன்மையானது. இவ்வழிபாட்டு மரபு சமகாலத்திலும் முக்கியத்துவம் பெற்றிருப்பதற்கு வடஇலங்கை, கிழக்கிலங்கையிலுள்ள நாக வழிபாட்டு ஆலயங்களைச் சான்றாகக் காட்டலாம். மரநிழலின் கீழுள்ள பாம்புப் புற்றிற்கு படையல் செய்து வழிபட்ட மக்கள் காலப்போக்கில் பாம்பு புற்றை கர்ப்பக்கிருகத்தில் வைத்து அதற்கு ஆலயம் அமைத்து வழிபடுகின்றனர். இதற்கு யாழ்ப்பாணத்தில் எருவன், கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு ஆகிய இடங்களிலுள்ள நாக வழிபாட்டு ஆலயங்களைக் குறிப்பிடலாம். இப்பாம்புப் புற்று வழிபாட்டை பெருங்கற்கால மக்கள் மண்பானையில் செய்து வழிபட்டதை நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட பானை உறுதிசெய்கிறது. இப்பானையில் செய்யப்பட்ட சிறிய துவாரமும், அதைச் சுற்றி கவிழ்ந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கும் சிறிய கலசங்களும் முக்கியத்துவம் வாய்ந்ததால் முழுமையாக மண்ணுடன் அகழ்ந்து எமது அருங்காட்சியகத்திற்கு எடுத்து வந்தோம். இப்பானைக்குள் இருக்கக் கூடிய சின்னங்களை கண்டறியும் நோக்கில் தமிழகத் தொல்லியல் அறிஞர் வை.சுப்பராயலு அவர்களின் ஆலோசனையுடன் ஆராய்ந்த போது அதற்குள் அழகான நாகபாம்புச் சிலையைக் கண்டுபிடிக்க முடிந்தது. இதிலிருந்து நிலத்தில் நாட்டப்பட்ட நாகபாம்புச் சிலையை அரைவட்ட வடிவில் செய்யப்பட்ட பானையால் மூடி அக்கால மக்கள் வழிபட்டனர் என்பது தெரியவந்துள்ளது. இம்மரபே பிற்காலத்தில் புற்று வழிபாடு தோன்றக் காரணமாக இருந்துள்ளது. இதன் முக்கியத்துவம் தொடர்பாக கலாநிதி பொ.இரகுபதி கூறும்போது "பானையின் விளிம்பைச் சுற்றி கவிழ்ந்த வடிவில் உள்ள சிறிய கலசங்களை பாம்பு புற்றில் வரும் சிறிய துவாரங்களாகவும், பானையின் சிறிய வாய்ப்பகுதி பாம்புப் புற்றிலிருந்து பாம்பு வெளியேறும் வழியாகவும் உள்ளன. பிற்காலத்தில் பாம்புப் புற்றை நாக தெய்வத்தின்


பிற்கால நாக வழிபாட்டில் செப்புத்தட்டத்தில் அல்லது செப்புப் பாத்திரத்தில் நாகபாம்பை வைத்து வழிபடுதல் அல்லது நாகதோசம் நீங்குவதற்காக அதனை ஆலயங்களுக்கு கொடுக்கும் மரபு காணப்படுகிறது. சில ஆலயங்களில் நாகதோசம் நீங்குவதற்கு நாகபாம்பை மண் சட்டியில் வைத்துக் கொடுக்கும் மரபு இன்றும் காணப்படுகின்றது. இம்மரபு பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றியதை நாகபடுவான் அகழ்வாய்வு உறுதிப்படுத்துகின்றது.





இங்கு அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட மூன்றாவது ஆய்வுக்குழியில் மண் சட்டிகளின் விளிப்புப் பகுதியில் நான்கு திசைகளை நோக்கியவாறு நாகபாம்பு படமெடுத்த நிலையில் இருக்க, அவற்றின் வால் பகுதிகள் சட்டிக்குள் இணைந்து சட்டியின் நடுமையத்தில் ஒரு வளையமாகக் காணப்படுகின்றது. இக்குழியின் இன்னொரு இடத்தில் சிறிய வாய்ப்பகுதி கொண்ட பானையும், பானையின் மேற்பகுதியில் வாய்ப பகுதியைச் சுற்றி மூடிய நிலையில் நான்கு சிறு கலசங்களும் காணப்படுகின்றன. பானையின் மூன்று திசைகளிலும் தெய்வங்கள் அமர்ந்திருக்கும் பீடங்கள் காணப்படுகின்றன. அவற்றில் அமர்ந்துள்ள தெய்வத்தின் இடது கால் பானையை முட்டியவாறு உள்ளது. நான்காவது திசையில் சட்டியின் விளிம்பில் படமெடுத்த நாக பாம்பு காணப்படுகிறது. இவ்வாறு வேறுபட்ட சின்னங்கள் ஒரேயிடத்தில் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட வகையில் வைக்கப்பட்டதற்கான பொருள் விளக்கத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நாக வழிபாடு பற்றிய ஆய்வில் புலமையுடைய தமிழக அறிஞர்களுக்கும் இது புதிய சான்றாகக் காணப்படுவதால் அவர்களும் மாறுபட்ட கருத்துக்களையே தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும் இச்சின்னங்கள் நாகபாம்பை





இக்கல்வெட்டுக்களில் தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் தமிழ் மொழிக்கே சிறப்பான எழுத்துக்களும், தமிழ்பிராமி எழுத்தை ஒத்த வடிவங்களும், தமிழ்ப் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. இலங்கையில் பிராகிருத மொழியை எழுதுவதற்கு 40 எழுத்துக்கள் இருந்தும் கல்வெட்டுக்களில் தமிழ்ப் பிராமியில் பயன்படுத்தப்பட்ட இருபது வகையான எழுத்துக்களும், எழுத்து வடிவங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பாக நோக்கத்தக்கது. ஒரு எழுத்து தோன்றி பல ஆண்டுகள் கடந்த பின்னரே அவ்வெழுத்தின் வடிவம் மாற்றம் பெறுகின்றது. ஆனால் இலங்கையில் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட தொடக்ககாலக் கல்வெட்டுக்களிலேயே தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டுள்ளமை பிராகிருத மொழி வருவதற்கு முன்னரே இங்கு தமிழ் மொழியின் பயன்பாடு இருந்துள்ளமை தெரிகிறது. இவற்றைக் கருத்திற் கொண்டே சிங்கள எழுத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பேராசிரியர் சத்தமங்கல கருணாரட்ன, ஆரிய அபயசிங்கா, பெர்ணாந்தோ போன்ற அறிஞர்கள் பௌத்த மதத்துடன் வடஇந்தியப் பிராமி எழுத்து இலங்கைக்கு அறிமுகமாவதற்கு முன்னர் தென்னகப் பிராமி எழுத்து புழக்கத்தில் இருந்துள்ளது எனக் கூறுகின்றனர் (Ariyasinghe 1965, Karunaratne 1984).

பௌத்த மதம் பற்றிக் கூறும் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் நாக என்ற பெயர் பிராகிருத மொழியில் "நஹ", "நஹஸ" "நஹய" நஹலி" என்றே எழுதப்பட்டுள்ளன (Paranavitan 1970::nos1120,1998. 1982 : nos:126, 138,180,267). ஆயினும் சில கல்வெட்டுக்களில் தமிழகத்தைப் போல் இப்பெயர் ந(ா)க, நாக, ணாக எனத் தமிழ் மயப்படுத்தியும் எழுதப்பட்டுள்ளன (Mahadevan1966:no33).



இவ்வாதாரங்கள் நாக என்ற பெயரில் தமிழர்கள் இங்கு வாழ்ந்ததையும், அவர்கள் பௌத்தர்களாக அல்லது பௌத்த மதத்தை ஆதரித்தவர்களாக இருந்துள்ளனர் என்பதையும் உறுதிப்படுத்துகின்றன. அநுராதபுரத்திற்கு வடக்கே கண்டுபிடிக்கப்பட்ட கி.மு.1ஆம் நூற்றாணடைச் சார்ந்த பிராமிக் கல்வெட்டு இங்கிருந்த "நாகநகர்" பற்றிக் கூறுகிறது (Karunaratne 1984:82). இது நாகர்கள் வாழ்ந்த

ஆலயமாக கொண்டு படையல் செய்து வழிபடும் மரபு தோன்றுவதற்கு முன்னோடியாக இருந்த பூர்வீக வழிபாட்டு மரபையே நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட வழிபாட்டு மையம் உறுதிப்படுத்துவதாகக் கொள்ள முடிகிறது"

தென்னாசியா நாடுகளிடையே மத வழிபாட்டில் நாகபாம்பைக் குலத்தெய்வமாகக் கொண்டு வாழ்ந்த மக்களிடையே அது காலப்போக்கில் இனம், தனிநபர், அம்மக்கள் வாழ்ந்த இடம், பிராந்தியம் என்பவற்றை அடையாளப்படுத்தும் பெயராக மாறியது வரலாறாகும். இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து நாகவழிபாட்டு மரபு தோன்றியதற்கு கட்டுக்கரை, நாகபடுவான் அகழ்வாய்வுகள் சான்றாகக் காணப்பட்டாலும் அம்மரபு காலப்போக்கில் தமிழரையும், தமிழர்கள் வாழ்ந்து வரும் பிராந்தியத்தையும் குறித்ததென்பதை இங்கே எடுத்துக்காட்டுவது இவ்வாய்வின் முக்கிய கருப்பொருளாகும். நீண்டகாலமாக "நாக" என்ற பெயரின் மூலமொழி பற்றி அறிஞர்கள் பலரும் ஆராய்ந்து வருகின்றனர். மொழியியல் அறிஞர்களில் ஒரு சாரார் இதன் மூல மொழி வடமொழி சார்ந்ததெனவும், குமார்சட்டர்ஜி, பரோ போன்ற மொழியியல் அறிஞர்கள் இது திராவிட மொழி சார்ந்ததெனவும் கூறுகின்றனர். ஆயினும் இலங்கையில் இப்பெயரை மொழி வேறுபாடின்றி பலதரப்பட்ட மக்களும் தனிநபர் பெயராகப் பயன்படுத்தியதற்கு பிராமிக் கல்வெட்டுக்களிலும், பாளி இலக்கியங்களிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. அக்காலத்தில் இருந்தே நாக என்ற பெயரில் தமிழ் மொழியின் செல்வாக்கு ஆரம்பமாகியுள்ளது.

தென்னாசியாவின் பல வட்டாரங்களில் சுதேச மொழிகள் இருந்தும் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுவரை (இற்றைக்கு 1700 ஆண்டுகளுக்கு முன்னர்) பௌத்த, சமண மதங்களின் மொழியான பிராகிருதமே கல்வெட்டு மொழியாக இருந்தது. சமகாலத்தில் தமிழகத்தில் கல்வெட்டு மொழியாக தமிழ் இருந்தாலும் அக்கல்வெட்டுக்களில் 25 விழுக்காடு சொற்கள் பிராகிருதமாக உள்ளன. இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் பிராகிருத மொழியில் பௌத்த மதம் சார்ந்த செய்திகளைக் கூறுகின்றன. ஆயினும்

வந்த 32 தமிழ்ச் சிற்றரசர்களை ஆரம்பத்தில் வெற்றி கொள்ள வேண்டியிருந்ததாகக் கூறுகிறது. மகாவம்சத்தின் இக்கூற்று கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னரே தென்னிலங்கையில் தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்ததற்கு மேலும் சான்றாகும்.

1990 களில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உடுத்துறை என்ற கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி.2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாணயம் வடஇலங்கையிலும் தமிழ் மொழி பேசிய நாகரின் ஆட்சியிருந்ததற்கு முக்கிய சான்றாகக் காணப்படுகிறது. இந்நாணயத்தின் முன்பக்கத்தில் பொறிக்கப்பட்ட சாசனத்தை இந்திய அறிஞர் பேராசிரியர் சுப்பராயலு நாகவம்சம் எனவும், சாசனவியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் "நாகபூமி" (Nākapūmi) எனவும் வாசித்துள்ளனர். இருவரின் வாசிப்புக்களிலும் சிறிய வேறுபாடு காணப்பட்டாலும் இந்நாணயம் நாகரின் ஆட்சியில் வெளியிடப்பட்டதென்பதை உறுதிப்படுத்தியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ சமகாலத்தில் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த நாக மன்னர்களைப் பற்றியும் மகாவம்சம் கூறுகிறது. அவர்களுள் இளநாக மன்னனின் பட்டத்தரசியாக இருந்த தமிழாதேவி (தமிழ் அரசி) பற்றியும் இந்நூல் மேலும் கூறுகின்றது. இப்பெயரில் இருந்து இளநாகன் ஒரு தமிழ் மன்னனாக இருந்திருக்கவேண்டும் என அறிஞர்கள் கூறுகின்றனர். மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் தமிழ்மொழி பேசிய நாக மக்கள் வரலாற்றுத் தொடக்க காலத்தில் இலங்கையின் பல வட்டாரங்களில் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது. ஆயினும் தற்காலத்தில் நாகர் பற்றிய வரலாற்று நினைவுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களிடையே பெரிதும் காணப்படுகின்றன.

பேராசிரியர் இந்திரபாலா தென்னிந்தியாவிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழுக்கள் அநுராதபுரத்திலும், தென்னிலங்கையின் ஏனைய பிராந்தியங்களிலும் பிராகிருத மொழி தழுவிய பேரினக் குழு உருவாகிய போது, ஏனையோர் வடக்கில் தமிழ் இனக்குழுவுடன் கலந்து கொண்டனர் எனக் குறிப்பிடுகிறார் (Indrapala 2005:172-73). இந்த இனக்குழு வடக்கில் மட்டுமன்றி சமகாலத்தில் கிழக்கிலும்

நகரம் என்ற பொருளில் அமைந்துள்ளது. பிராகிருத மொழியில் "நஹநஹர" (Naganagara) என எழுதப்படும் இப்பெயர் இச்சாசனத்தில் தமிழில் ந(ா)கநகர் (Nakanakar) என எழுதப்பட்டுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கலாநிதி இரகுபதி கல்வெட்டில் வரும் இந்த "நாகநகர்" அக்காலத்தில் கந்தரோடையின் தலைநகராக இருந்திருக்கலாம் அல்லது கந்தரோடையைக் குறித்திருக்கலாம் எனக் கருதுகிறார் (சுயபரியவால 1991). ஆனால் நிக்ல்' என்ற அறிஞர் கி.பி.9ஆம் நூற்றாண்டுக்குரிய சாசனமொன்றில் வரும் நாகநகரை ஆதாரம் காட்டி மேற்கூறப்பட்ட கல்வெட்டில் வரும் நாகநகரை வவுனியாவுக்கு வடக்கில் இருந்த ஒரு நகரம் என அடையாளப்படுத்துகிறார் (Nicholas 1963:81) இந்நகரம் எங்கு அமைந்திருந்தாலும் இந்த நகரில் வாழ்ந்த நாகர்கள் தமிழர்களாக இருந்தனர் என்பதை இக்கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது என்பதில் ஐயமில்லை.


அண்மையில் தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்நாணயங்கள் இலங்கைத் தமிழரின் தொன்மையையும், நாக மன்னர்களின் ஆட்சியையும் உறுதிப்படுத்துவதில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இங்கு கிடைத்த நாணயங்கள் சில தமிழ் மொழியில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு நாணயங்களில் நாக மற்றும் ணாக என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளன (Bopearachchi 1999:51-60, Pushparatnam 2003:67-78). ஒரு நாணயத்தில் அதை வெளியிட்ட மன்னன் பெயர் "தஷ்புர சடணாகராசன்" என எழுதப்பட்டுள்ளது(Pushparatnam 2002: 5-6). இதன் பொருள் திஷ்புரத்தில் ஆட்சி புரிந்த சடணாகராசன் என்ற மன்னன் வெளியிட்ட நாணயம் என்பதாகும். இதன் மூலம் இச்சிற்றரசனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தென்னிலங்கை மக்களில் ஒரு பிரிவினராவது தமிழ் மொழி பேசிய நாக இன மக்களாக இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. மேலும் இக்காலகட்ட அரசியல் வரலாறு கூறும் மகாவம்சம் துட்டகாமினி என்ற மன்னன் எல்லாளன் என்ற தமிழ் மன்னனை அநுராதபுரத்தில் வெற்றி கொள்வதற்கு முன்னர் தென்னிலங்கையில் அதிகாரம் செலுத்தி

ஆதிச்சநல்லூர் பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சாசனங்களின் காலம் ஏறத்தாழ கி.மு.550க்கு முற்பட்டவை எனக் கணிப்பிடப்பட்டுள்ளன (Conigham,Robin 2002:99-107). இக்காலக்கணிப்புகள் பௌத்த மதத்துடன் பாளி, பிராகிருத மொழி இலங்கைக்கு அறிமுகமாவதற்கு ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் எழுத்தும், தமிழ் மொழியின் பயன்பாடும் புழக்கத்தில் இருந்துள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றன. இவ்வகையான பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட சாசனங்கள் வடஇலங்கையில் கந்தரோடை, பூநகரி, இரணைமடு ஆகிய இடங்களிலும், மட்டக்களப்பில் வவுணதீவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பூநகரி (ஈழவூர்), இரணைமடு ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களில் நாக என்ற பெயரும் வவுணதீவில் கிடைத்த மட்பாண்டங்களில் தம்பன், வண்ணக்கன் ஆகிய பெயர்களுடன் இருபது மட்பாண்டங்களில் , ணாகன் என்ற பெயர் காணப்படுகின்றது. இப்பெயர் தமிழ் மொழிக்குரிய அன் என்ற விகுதியுடன் முடிவது சிறப்பாக நோக்கத்தக்கது. இவ்வாதாரங்கள் வடக்கு, கிழக்கின் பூர்வீக மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழு எனவும் அவர்களில் பெரும்பான்மையோர் தமிழ் மொழி பேசும் மக்களாக வாழ்ந்து வந்துள்ளனர் எனவும் கூறலாம். இதற்கு மேலும் சில ஆதாரங்களைக் காட்டலாம்..

பாளி வரலாற்று ஏடுகளில் இலங்கையின் புராதன துறைமுகங்களின் பெயர்கள் தொட்ட, தொட என்ற விகுதியுடன் முடிகின்றன. ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்த துறைமுகநகரங்களே “பட்டன” என்ற விகுதியோடு அழைக்கப்படுகிறது. இதற்கு ஜம்புக்கோலபட்டன (யாழ்ப்பாணம்) (Mahavamsa:xi.23,38, xviii:7,xix 23, 25, 60 xx:25), கோணகாமகபட்டன (திருகோணமலை மாவட்டம்) (Ibid:iii.24, Culavamsa xli: 79,xlviii.5. lxxi.18), மஹபட்டன (மன்னார் மாவட்டம்) (இந்திரபாலா 2006:180) ஆகிய துறைமுக நகரங்களைக் குறிப்பிடலாம். இதில் பின்னொட்டு விகுதியாக வரும் “பட்டினம்” என்பதை ஒரு திராவிடச் சொல்லாகக் குறிப்பிடும் மொழியியல்

தோன்றியது எனக் கூறலாம். இலங்கையில் கி.மு.3ஆம், 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஐந்து பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழர்கள் மொழியால் ஒரு இனக்குழுவாக வாழ்ந்ததை உறுதி செய்கின்றன. அவற்றுள் நான்கு கல்வெட்டுக்களில் இரண்டு வடஇலங்கையில் வவுனியாவிலும், ஏனைய இரண்டு கல்வெட்டுக்கள் கிழக்கிலங்கையில் அம்பாறை (குடுவில்), திருகோணமலையில் சேருவில் ஆகிய இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்கள் சிலவற்றில் நாகர் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றிருப்பது வரலாற்றுத் தொடக்கத்திலேயே நாக இனக்குழுவின் மொழியாகத் தமிழ் இருந்ததற்குச் சான்றாகும். இதை இப்பிராந்தியங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப்பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

அண்மைக்காலங்களில் தமிழகத்திலும், இலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்பாண்ட சாசனங்கள் (Brahmi Posherds) தொடர்பான ஆய்வுகளும், நவீன காலக்கணிப்புகளும் இலங்கையில் தமிழ் மொழியின் தொன்மையை உறுதிப்படுத்துவதில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட சாசனங்கள் பெரும்பாலும் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களுடன் மங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டவையாக உள்ளன.




இவற்றில் மட்பாண்டத்தை வனைந்தவர்களின் பெயர்கள் அல்லது அதைப் பயன் படுத்தியவர்களின் பெயர்களே பெரும்பாலும் காணப்படுகின்றன. இவ்வாறான பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட சாசனங்கள் தமிழகத்திலும் இலங்கையிலும் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அநுராதபுர பெருங்கற்காலப் பண்பாட்டு அகழ்வாய்வில் கண்டு பிடிக்கப்பட்ட எழுத்துப் பொறித்த சாசனங்கள் நவீன காலக்கணிப்பில் கி,மு. 650 முதல் கி.மு. 700 வரை பயன்பாட்டிலிருந்தவை எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தில்

அவர்களுடன் இணைந்து அநுராதபுர அரசைத் தோற்கடித்தனர் என சூளவம்சம் கூறுவது உறுதிப்படுத்துவதாக உள்ளது (Culavamsa 50:12-42).

பண்டுதொட்டு திருகோணமலை உள்ளிட்ட அநுராதபுரத்திற்கு வடக்கில் உள்ள பிராந்தியம் நாகதீப(ம்), நாகநாடு என வரலாற்று மூலங்களில் தனித்து அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இப்பெயர்களே கி.பி.13 ஆம் நூற்றாண்டுவரை இப்பிராந்தியத்தில் வன்னி, வன்னிப்பற்று என்ற பெயர்களும், 15 ஆம் நூற்றாண்டில் யாழ்பாணயன்பட்டினம் என்ற பெயரும் தோன்றும் வரை தொடர்ச்சியாகப் பயன்பாட்டில் இருந்து வந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. பண்டைய இலங்கையில் நாக இனமக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் பல பிராந்தியங்களில் காணப்பட்டாலும் அது இலங்கையில் ஒரு பிராந்தியத்தின் பெயராக அடையாளப்படுத்திக் கூறப்பட்டு வந்ததற்கு தற்காலத்தில் இப்பிராந்தியத்தில் வாழும் தமிழ் மக்களின் பூர்வீக வரலாறு பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழுவோடு தோன்றி வளர்ந்ததைக் காட்டுகின்றது எனலாம். மகாவம்ஸம் கி.மு.6ஆம் நூற்றாண்டில் புத்தர் இலங்கை வந்த போது நாகதீபத்தில் இரு நாக மன்னர்களிடையே ஏற்பட்ட சிம்மாசனப் போராட்டத்தை தீர்த்து வைத்ததாகக் கூறுகிறது (ஆயாயஎயஅளய 8:54). இதில் மகாவம்சம் கூறும் புத்தர் வருகை ஒரு ஐதீகமாக இருப்பினும் இந்நூல் எழுதப்பட்ட கி.பி 6ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்திற்கு வடக்கில் இருந்த பிராந்தியம் நாகதீபம் என்ற பெயரால் அழைக்கப்பட்டதை இவ்வரலாற்றுச் செய்திகள் உறுதிப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

ஆதிகாலத்தில் இந்தியாவை அடுத்து இலங்கையுடன் அதிக அளவில் வணிக உறவை ஏற்படுத்திக் கொண்ட வரலாறு கிரேக்க, உரோம நாட்டு வணிகர்களுக்கு உண்டு. இவ்வுறவுகள் பெரும்பாலும் வடஇலங்கைத் துறைமுகங்கள் ஊடாக நடைபெற்றதை மாதோட்டம், கந்தரோடை, யாழ்ப்பாணக் கோட்டை, பூநகரி, சாட்டி, அண்மையில் கட்டுக்கரை முதலான இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கிரேக்க, உரோம நாடுகளுக்குரிய பலவகை மட்பாண்டங்கள், மதுச்சாடிகள்,

அறிஞர் பரோ இது பட், பட்டி என்ற சொல்லின் அடியாகப் பிறந்ததாகக் குறிப்பிடுகிறார் (Burrow 1968:211). இப்பெயர் மலையாள, கன்னட மொழிகளில் பட்டி எனவும், தெலுங்கில் பட்டு எனவும், சமஸ்கிருதத்தில் பட்டன எனவும் அழைக்கப்படுகிறது. இவை கடற்கரை சார்ந்த நகர், சிறுநகர், கிராமம், ஊர் போன்ற இடங்களைக் குறிக்கின்றன (டீரசசழறஞுநுஅநநெயர 1961:ஜெ.3199). சங்க நூல்களில் பட்டினம் என்பது பொதுவாக கடற்கரை சார்ந்த இடங்களுக்குரிய பெயராகக் குறிப்பிடப்படுகிறது. தமிழகத்தில் ஆந்திராவில் இருந்து கன்னியாகுமரி வரை கடற்கரை சார்ந்த சமூகங்கள் "பட்டினத்தார்" என அழைக்கும் மரபு காணப்படுகின்றது (Veluppillai 2002:149). ஈழத் தமிழரிடம் நகரங்களில் வசிப்போரை பட்டணத்தார் என அழைக்கும் மரபு இன்றும் காணப்படுகின்றது. பேராசிரியர் இந்திரபாலா இலங்கையில் ஏனைய துறைமுகங்களுக்கு பட்டினம் என்ற விகுதி பயன்படுத்தப்படாது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்த துறைமுகங்களுக்கு மட்டும் அப்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளமை ஆதியிலும் இங்கு தமிழ்மொழி பேசுவோர் அல்லது திராவிட மொழிபேசுவோர் வாழ்ந்த இடங்கள் என்பதற்கான மறைமுக ஆதாரங்கள் எனக் குறிப்பிடுகிறார் (இந்திரபாலா 2006: 180).

பேராசிரியர் வேலுப்பிள்ளை சம்பந்தர் தேவாரத்தில் திருகோணமலை பற்றி வரும் "குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்" என்ற சொற்றொடர் அங்கு தமிழர்கள் செறிந்து வாழ்ந்தமைக்குச் சான்றாக அமைகின்றதெனக் குறிப்பிடுகிறார் (வேலுப்பிள்ளை 1986). பேராசிரியர் கே. எம்.டீ சில்வா பத்தி இயக்கத்தின் செல்வாக்கே இலங்கையில் இந்து, பௌத்த என்ற சமய வேறுபாடு தோன்றி தமிழரும் சிங்களவரும் தமது இனத் தனித்துவத்தைப் பேணிப்பாதுகாப்பதில் முனைப்பு பெற்றதுடன், அதன் விளைவால் தமிழர் வாழ்ந்த பிராந்தியங்கள் தென்னிந்தியப் படையெடுப்பாளருக்கு ஆதரவு வழங்கும் தளமாக மாறியதெனவும் கூறுகிறார் (Silwa 1981: 20-21). இக்கூற்றை ஒன்பதாம் நூற்றாண்டில் (கி.பி.835) பாண்டியமன்னன் ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் அநுராதபுரத்திற்கு எதிராகப் படையெடுத்து வந்து வடஇலங்கையில் (உத்தரதேசத்தில்) தங்கியிருந்த போது மாதோட்டத்தில் வாழ்ந்த தமிழர்களும்

இளவரசியை மணந்த கதை கூறப்படுகின்றது.

எட்டாம் நூற்றாண்டில் ஸ்ரீநாக என்பவன் தலைமையில் நாகதீபத்தில் (உத்தரதேசத்தில) இருந்து அநுராதபுரத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பு பற்றிய செய்திகள் சூளவம்சத்தில் காணப்படுகின்றன. (Culavamsa 44: 70-73). சுவாமி ஞானப்பிரகாசர் இப்படையெடுப்பை மேற்கொண்ட ஸ்ரீநாகன் ஒரு தமிழ் மன்னனாக இருக்கவேண்டும் எனக் கூறுகின்றார் (ஞானப்பிரகாசர் சுவாமி 1928:47-50). பக்தி இயக்கத்தை தலைமையேற்று நடாத்திய நாயன்மார்களுள் ஒருவரான சுந்தரர் தேவாரத்தில் தமிழகத்தை அடுத்து முதன்மை பெற்ற ஆலயங்களில் ஒன்றாக வடஇலங்கையில் மாதோட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வரத்தையும், கிழக்கிலங்கையில் திருகோணமலையிலுள்ள கோணேஸ்வரர் ஆலயத்தையும் போற்றிப்பாடுகிறார். பேராசிரியர் வேலுப்பிள்ளை மாதோட்டத்தில் உள்ள ஆலயம் கேதீஸ்வரம் என்ற பெயரைப் பெற்றதற்கு அது நாகரின் ஆலயமாக இருந்ததே காரணம் எனக் குறிப்பிடுகின்றார் (Kētu is considedered to be a cobra repreaening the Nagas. Veluppillai 2002:154).

கி.பி.10ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய மன்னன் வல்லபன் என்பவன் நாகதீபத்தின் மீது படையெடுத்த செய்தி சூளவம்சத்தில் காணப்படுகிறது. (Culavamsa53:12-16). இப்படையெடுப்பு தோல்வியில் முடிந்திருக்கலாம் என்பதை வெசகிரியில் கிடைத்த சிங்களச் சாசனம் உறுதிப் படுத்துகின்றது (E.Z, I:35-51). ஆனால் இதே காலப்பகுதியில் சோழ மன்னன் முதலாம் பராந்தகன் ஈழத்தின் மீது படையெடுத்து வெற்றி



பெற்ற செய்திகளை அவன் வெளியிட்ட கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இந்த வெற்றியின் நினைவாகப் பராந்தக சோழன்

நாணயங்கள் என்பன உறுதி செய்கின்றன. இவ்வணிக உறவுகள் பற்றிக் கூறும் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொலமியின் குறிப்பில் இலங்கையில் இருந்த முக்கிய கரையோரப் பட்டினங்களில் ஒன்றாக நாகதீபம் "நாகடிப" என்ற இடம் கூறப்பட்டிருப்பதுடன், அவ்விடம் அவர் வரைந்த தேசப்படத்தில் இலங்கையின் வடபகுதியில் இருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (Weerakody 1997:87).

1936ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வல்லிபுரம் என்ற இடத்தில் பிராமி எழுத்துப் பொறித்த கி.பி.3ஆம் நூற்றாண்டுக்குரிய பொற்சாசனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரேயொரு பொற்சாசனமாகும். இச்சாசனத்தில் "நகதிவ" என்ற இடத்தில் அமைக்கப்பட்ட பௌத்த விகாரை பற்றிக் கூறப்படுகின்றது (Paranavitana 1982:79-80). இந்த "நாகதிவ" என்ற பெயர் பாளி மொழியில் வடஇலங்கையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட நாகதீப(ம்) என்ற பெயரின் இன்னொரு வடிவமாகும். இச்சாசனத்தில் காணக்கூடிய சிறப்பம்சம் சாசனத்தில் பிராகிருத மொழியுடன் சில தமிழ்ச் சொற்களும் கலந்து எழுதப்பட்டுள்ளன. உதாரணமாக பிராகிருத மொழியில் "நாஹ" என எழுதப்படும் பெயர் இச்சாசனத்தில் நாக என தமிழில் எழுதப்பட்டுள்ளது. இந்த வேறுபாடுகள் இச்சாசனத்தை நாகதீபத்தில் வாழ்ந்த தமிழ்ப் பௌத்தர்கள் எழுதியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

வடஇலங்கையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட நாகதீப(ம்) என்ற பெயர் சில இடங்களில் நாகநாடு, உத்திரதேசம் (வடபகுதி) எனவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கி.பி. 6ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் தோன்றிய இருபெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை தமிழகத்திற்கு அப்பால் கடல்கடந்து செல்லவேண்டிய இடங்களில் ஒன்றாக நாகநாட்டைக் குறிக்கின்றது. இதன் சமகாலத்திற்குரிய வேலூர்ப்பாளைச் செப்பேட்டில் பல்லவ மன்னன் ஒருவன் நாககுல மகளை மணந்த செய்தி சொல்லப்படுகின்றது(பாலசுப்பிரமணியம்) இதன் பின்னர் தோன்றிய கலிங்கத்துப்பரணியில் சோழவம்சத்து கிள்ளிவளவன் நாகநாட்டு

மறைந்துவிட்டன. ஆனால் தமிழர் மத்தியில் அப்பெயர்கள் தற்காலம் வரை பயன்பாட்டிலுள்ளன. இதற்கு வடக்கு-கிழக்கில் வாழும் தமிழர் சமூகத்தில் பயன்படுத்தப்படும் நாகன், நாகி, நாகதேவன், நாகராசன், நாகம்மாள், நாகவண்ணன், நாகநாதன், நாகமுத்து முதலான தனிநபர் பெயர்களையும், அவர்கள் வாழ்விடங்களில் புழக்கத்திலுள்ள நாகர்கோயில், நாகமுனை, நாகபடுவான், நாகதேவன்துறை, நாகமலை, நாகதாழ்வு முதலான இடப்பெயர்களையும், கிராமங்கள் தோறும் காணப்படும் நாக வழிபாட்டு ஆலயங்களையும் உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இவ்வாதாரங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் உருவான நாக குலமரபுடன் தமிழருகிருந்த நீண்டகால உறவையும், தொடர்பையும் உறுதிப்படுத்துவதாக உள்ளன.

இலங்கையின் பூர்வீக மக்கள் தொடர்பாக ஆராய்ந்த தொல்லியல், வரலாற்று அறிஞர்கள் பலரும் சிங்கள மக்களின் பூர்வீகத்தை வடஇந்தியாவுடனும், தமிழரின் பூர்வீகத்தை தமிழ் நாட்டுடனும் (தென்னிந்தியா) தொடர்புபடுத்தி அழுத்தமாக ஆராயும் அணுகுமுறையைப் பின்பற்றி வந்துள்ளனர். ஆயினும் சமீபகாலத் தொல்லியல், மானிடவியல், மொழியியல், சமூகவியல் ஆய்வுகள் தற்கால தமிழ், சிங்கள மக்களின் மூதாதையினர் தென்னிந்தியா சிறப்பாக தென்தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்த நுண்கற்கால, பெருங்கற்கால மக்களின் வழித்தோன்றல்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. இதன் மூலம் தமிழ், சிங்கள மக்கள் ஒரே இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதையே பேராசிரியர் சேனக பண்டாரநாயக்காவின் இலங்கை மக்களிடையே உடற் கூற்றியல் வேறுபாடுகள் இல்லை. பண்பாட்டு வேறுபாடுகளே உண்டு என்ற கூற்றும் உணர்த்துகின்றது. பௌத்த மதத்துடன் அறிமுகமான பாளி, பிராகிருத மொழிகள் இங்கிருந்த தமிழ், திராவிட, ஆதிஒஸ்ரிக் மொழிகளுடன் கலந்ததன் விளைவாக இலங்கையில் மொழி வழிப் பண்பாடுகள் தோன்றின. அவற்றுள் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் உருவான நாக இனக்குழுவின் ஒருபிரிவினர் பிராகிருத மொழியால் உள்வாங்கப்பட்டு பிராகிருத மொழி பேசும் பெரும்பான்மை இனக்குழு உருவாகி அது காலப்போக்கில் சிங்கள மொழிபேசும் பௌத்தர்களாக மாறிய போது, நாக இனக்குழுவின் இன்னொரு

"ஈழமும் மதுரையும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்" என்ற விருதைப் பெற்றதையும், அந்த வெற்றியின் நினைவாக ஈழக் காசு என்ற பெயரில் நாணயம் வெளியிட்டான் என்பதையும் அவன் ஆட்சிக்கால கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. நாணயவியல் அறிஞர்கள் வடமொழியில் "உரக" என்ற பெயர் பொறித்த பொன் நாணயத்தையே பராந்தகசோழன் ஈழத்தை வெற்றி கொண்டதற்காக வெளியிட்டான் என அடையாளப்படுத்தியுள்ளனர். சோழ மன்னர்கள் கல்வெட்டுக்களை தமிழில் வெளியிட்ட போது சர்வதேச வர்த்தகத்திற்காக தமது பெயர்களையும், நாடுகளையும் நாணயங்களில் வடமொழியில் வெளியிட்டனர். இங்கே நாணயத்தில் வரும் "உரக" என்ற வடமொழிச் சொல் நாகர் அல்லது நாகநாடு எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த உதயணன் பெருங்கதையும், பிற்பட்ட மயிலநாதர் உரையும் தமிழகத்தைச் சுற்றியுள்ள நாடுகளாக ஈழத்தையும், சிங்களத்தையும் தனித்தனியாகக் கூறுகின்றன (வேலுப்பிள்ளை 1986:10). இவ்வாதாரங்களில் இருந்து பராந்தக சோழன் தான் வெற்றி கொண்ட நாக நாட்டைக் குறிக்க நாணயத்தில் வடமொழியில் உரக என்ற பெயரையும், கல்வெட்டுக்களில் தமிழில் ஈழம் என்ற பெயரையும் பயன்படுத்தினான் எனக் கூறமுடிகிறது. பாளி மொழியில் நாகதீப என அடையாளப்படுத்தப்பட்ட வடஇலங்கை கி.பி.13ஆம் நூற்றாண்டில் எழுந்த ராஜாவலிய என்ற சிங்கள இலக்கியத்தில் "மணிநாகதீப" என்ற பெயரால் அடையாளப்படுத்தப்படுகின்றது. கொடகும்புர என்ற அறிஞர் இப்பெயர் கந்தரோடையைக் குறித்திருக்கலாம் எனவும் கூறுகிறார் (Godakumbara 1968:7). ஏறத்தாழ இதே காலப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து வடஇலங்கைமீது படையெடுத்த கலிங்கமாகன் யாழ்ப்பாணத்தில் வந்திறங்கி அங்கு நாகர்குல அரசனைச் சந்தித்ததாக மட்டகளப்புமான்மியம் கூறுகின்றது (மட்டகளப்புமான்மியம் :54).

பண்டைய கால இலங்கையில் நாக மரபை நினைவுபடுத்தும் பெயர்களை பல மொழி பேசிய மக்களும் பயன்படுத்தியுள்ள போதிலும் அப்பெயர்கள் பிற்காலத்தில் படிப்படியாக

## உசாத்துணைகள்


01. இந்திரபாலா, கா., (2006), இலங்கையில் தமிழர்- ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, குமரன் பத்தக இல்லம், கொழும்பு.

02. இரகுபதி, பொ., (2006),வல்லியக்கனும் வல்லிபுரநாதரும், புலரி மறுபிரசுரம், யாழ்ப்பாணம்.

03. சிற்றம்பலம், சி.க., (1996), ஈழத்து இந்து சமய வரலாறு, பாகம்.1, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, கொழும்பு.

04. சேனக பண்டாரநாயக்கா.,(1985), (தமிழாக்கம்) "இலங்கை மக்கள் வசிப்பிடாமதல், தேசிய பிரச்சனை, வரலாறு, இனம் தொடர்பான சில கேள்விகள்"இலங்கையில் இனத்துவமமும் சமூகமாற்றமும், சமூக விஞ்ஞான மன்றம், கொழும்பு:1-23.

05. வேலுப்பிள்ளை, ஆ., (1986), ஈழத்து தொடக்க கால இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.

06. பத்மநாதன், சி., (2016), இலங்கைத் தமிழர் வரலாறு: கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும் (கிமு.250-கி.பி.300), இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்துமத அலுவல்கள் அமைச்சு, கொழும்பு.

07. பாலசுப்பிரமணியம், குடவாயில்., (1988),"ஈழத்து வெற்றியும் இராஜராஜன் காசும்",தினமணி (செய்தி நாளிதழ் 9.12.1988), சென்னை.


290303

பிரிவினர் தொடரந்தும் தமிழ் திராவிட மொழிகள் பேசும் மக்களாக இருந்தனர். இம்மக்கள் தொடக்க காலத்தில் இலங்கையின் முக்கிய நகரங்கள், துறைமுகங்களில் வாழ்ந்த போதும் பெரும்பான்மை மக்கள் வடஇலங்கையில் வாழ்ந்ததன் காரணமாகவே அப்பிராந்தியம் நாகதீபம் என்ற பெயரைப் பெற்றதெனலாம். இதற்கு வடஇலங்கையில் வாழ்ந்த மக்கள் மொழி, மதம், பண்பாடு என்பவற்றால் தமிழகத்துடன் நெருங்கிய ஒற்றுமை கொண்டிருந்ததுடன், இலங்கை தமிழக உறவில் வடஇலங்கை தமிழகத்தின் தொடக்க வாயிலாகவும், குறுக்கு நிலமாகவும் இருந்தமை இன்னொரு முக்கிய காரணமாக இருக்கலாம். மேலும் பக்தி இயக்கத்தின் விளைவால் இலங்கையில் தோன்றிய இந்து பௌத்த என்ற சமய வேறுபாடுகள் காலப்போக்கில் தமிழ், சிங்கள முரண்பாடாக உருவெடுத்த போது இலங்கையின் ஏனைய இடங்களில் வாழ்ந்த தமிழரும் பாதுகாப்பு கருதி வடக்கு-கிழக்கு மாகாணங்களில் குடியேறியமையும் இங்கு நாக இன மக்கள் செறிந்து வாழக் காரணம் எனலாம்.

பொதுவாக இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் இருந்து வர்த்தகர்களாக, படையெடுப்பாளர்களாக வந்து குடியேறியோரின் வழித்தோன்றல்கள் என்றே கூறப்பட்டு வந்துள்ளன. ஆனால் கட்டுக்கரை, நாகபடுவான் அகழ்வாய்வுகள் இலங்கைத் தமிழர் தமிழ்நாட்டிலிருந்து தமிழ் மொழி பேசும் மக்களாக வருவதற்கு முன்னரே அவர்களின் மூதாதையினர் இலங்கையில் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. அதற்கு பெருங்கற்காலப் பண்பாட்டுடன் உருவான நாக மரபு காரணம் எனலாம். இப்பண்பாடு இலங்கையில் அறுபதுக்கு மேற்பட்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டாலும் நாக மரபை அடையாளப்படுத்தும் விரிவான தொல்லியல் ஆதாரங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் கட்டுக்கரை, நாகபடுவான் அகழ்வாய்வுகளில் அதற்குரிய தொல்லியற் சான்றுகள் பல கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் தமிழரின் பூர்வீக வரலாறு பற்றிய எதிர்கால ஆய்வுகளில் இவ்விருவிடங்கள் தொடக்கப்புள்ளியாக இருக்கும் என நம்புகிறேன்.

01. Bopearachchi, O. and Wickramesinhe, W., (1999), Ruhuna an Ancient Civilization Revisited, -Numismatic and Archaeological Evidence on Inland and Maritime Trade, Nugegoda – Colombo.

02. Burrow, T. and Emeneau, M.B., (1961), Dravidian Etymological Dictionary, Oxford.

03. Conigham,Robin.,(2002), "Beyond and Before the Imperial Frontiers: Early Histoic Sri Lanka and the Origions of Indian Ocean Trade" Man and Environment, Journal of the Indian Society for Prehistoric and Quaternary Studies; Vol.XXVII,No.1:99-107.

04. Culavamsa, (1953), Geiger. W. [E.d], Ceylon Government Information Department, Colombo.

05. Deraniyagala, S.U., (1992), The Prehistory of Sri Lanka: An Ecologygical Perspective, Department of Archaeological Survey, Colombo.

06. Mahadevan, I., (1966), Corpus of the Tamil- Brahmi Inscriptions, Reprint of Seminar on Inscriptions, Department of Archaeology Government of Tamil Nadu, Madras.

07. Mahavamsa, (1950), (e.d) Geiger, W., The Ceylon Government Information Department, Colombo.

08. Nicholas, C.W., (1963), Historical Topography of Ancient and Medieval Ceylon in Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, Colombo, VI.

08. புஷ்பரட்ணம், ப.,(1999),"வடஇலங்கைச் சமூகவழக்கில் பெருங்கற்காலக் குறியீடுகள்" வளர்தமிழியல் அறிவியல், அனைத்திந்திய அறிவியியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர்.

09. புஷ்பரட்ணம், ப., (1999),"தென்னிலங்கையில் கிடைத்த தமிழ் நாணயங்கள் -ஒரு வரலாற்று நோக்கு"நாவாவின் ஆராய்ச்சி, இதழ்.49, சென்னை:55-70.

10. புஷ்பரட்ணம், ப., (2003),"உடுத்துறையில் கிடைத்த அரிய தமிழர் நாணயங்கள்", ஆவணம், இதழ். 14, தமிழகத் தொல்லியற் கழகம், தஞ்சாவூர்: :116-119.

11. புஷ்பரட்ணம், ப., (2007), இலங்கைத் தமிழர்-ஒரு சுருக்க வரலாறு, தமிழ்க் கல்விச் சேவை சுவிற்சர்லாந்து, மலேசியா.

09. Paranavitana, S., (1970), Inscription of Ceylon: Early Brahmi Inscriptions, The Department of Archaeology Ceylon, Colombo,I.

10. Paranavitana, S., (1983), Inscription of Ceylon: Late Brahmi Inscriptions, The Department of Archaeology Sri Lanka, Moratuwa, and , II [1].

11. Pushparatnam, P. (2002), Naka Dynasty as Gleaned from the Archaeological Evidences in Sri Lanka" Jaffna Science Association Tenth Annual Session:1-34.

12. Pushparatnam, P. (2000), Tamil Brahmi Graffiti from Northern Sri Lanka" Studies in Indian Epigraphy, Vol.XXVI, Maysore.

13. Ragupathy, P., (1991), The Language of the Early Brahmi Inscription in Sri Lanka, [Unpublished].

14. Seneviratne, S., (1984), The Archaeology of the Megalithic-Black and Red Ware Complex in Sri Lanka in Ancient Ceylon, Journal of the Archaeological Survey of Sri Lanka, 5:237-307.

15. Sitrampalam, S.K., (1990), Proto Historic Sri Lanka: An Inter-disciplinary Perspective in Journal of the Institute of Asian Studies, VIII [1]: 1-8.



UNIVERSITY OF JAFFNA LIBRARY

290303

A3933



சிரேஷ்ட பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் புத்தூரைச் சேர்ந்த பரமு பவானி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவர். இவர் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியை புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியில் நிறைவு செய்து 1979ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றார். அங்கு பேராசிரியர்கள் கா.இந்திரபாலா, சி.க.சிற்றம்பலம், வி.சிவசாமி, பொ.இரகுபதி, சீலன் கதிர்காமர், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, சா.சத்தியசீலன், செ.கிருஷ்ணராஜா, திருமதி. சோமசுந்தரி கிருஷ்ணகுமார் முதலானோரிடம் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றார். 1985 ஆம் ஆண்டு விரிவுரையாளராக நியமனம் பெற்ற இவர் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று இன்று இலங்கைப் பல்கலைக் கழகங்களில் உள்ள வரலாற்றுத் துறைகளில் ஒரேயொரு சிரேஷ்ட பேராசிரியராகத் திகழ்கின்றார். 1997-2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தென்னாசியாவின் முதன்மைத் தொல்லியல் பேராசிரியர் வை.சுப்பராயலு அவர்களின் வழிகாட்டலில் ஆய்வு செய்து தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலே கலாநிதிப் பட்டம் பெற்றார். இவரது கலாநிதிப்பட்ட ஆய்வேடு மிகவும் உயர் நிலையிற் பரிந்துரைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1990 களில் இருந்து இன்றுவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருபவர். குறிப்பாக பூநகரி, சாட்டி, கட்டுக்கரை, நாகபடுவான் திருகோணமலை (திருமங்களாய்), மட்டக்களப்பு (உசானமலை), போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவரது அகழ்வாய்வுகள் ஈழத் தமிழரின் தொன்மையை, இருப்பை, பண்பாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டுபவை. உலகப்புகழ் பெற்ற தொல்லியல் ஆய்வாளர்களே இவரது ஆய்வுகளை விதந்து பாராட்டியுள்ளனர்.

75க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும், பதினைந்து ஆய்வு நூல்களையும், தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். தேசிய, சர்வதேச ஆய்வரங்குகள் பலவற்றிலே பங்குபற்றியுள்ளார். இவரது நான்கு நூல்கள் இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றவை. மூன்று நூல்கள் வடக்கு மாகாணப் பண்பாட்டு அமைச்சின் பரிசைப் பெற்றவை. 2005ஆம் ஆண்டு சுவீடன் உப்சலாப் பல்கலைக்கழகப் புலமைப் பரிசைப் பெற்றவர். சுவிற்சர்லாந்து தமிழ்ப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கான வரலாறு, பண்பாடு தொடர்பான நூல்களை எழுதியவர்.

இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாறு, தமிழ் அரச மரபின் தோற்றம், பண்டைய கால நாணயங்கள், கல்வெட்டுக்கள் முதலான ஆய்வுகளும், முடிவுகளும் அறிஞர்களின் அங்கீகாரத்தைப் பெற்றவை. இவரது ஈழத் தமிழரின் மரபுரிமை அடையாளங்கள் என்ற நூல் புலம்பெயர் தமிழர்களால் பெரிதும் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தொல்லியல் ஆய்வுத் துறையிலே தொடர்ந்தும் பேராசிரியர் புஷ்பரட்ணம் ஈடுபட்டு வருகின்றார்.

Virus Printers Inuvil